# பேரரசன் ஜோன்ஸ்



G3968
07B01
3968

தமிழ்நாட்டு அரசின்
சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்பு வெளியீடு: 7

# பேரரசன் ஜோன்ஸ்

யுஜின் ஓ நீல்

தமிழாக்கம்

திருமலைவேலு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

First Edition — 1983
Number of Copies — 2,000

"Copyright © 1921 Eugene O 'Neill renewed 1949. All rights reserved under international copyright convention."

**EMPEROR JONES**

**EUGENE O'NEIL**

*Tamil Translation*
**THIRUMALAIVELU**

Price : Rs. **6-30**

Printed on 70 GSM imported paper

Printed at
Print House (Makkal Kural),
Madras-600 024

# பொது முன்னுரை

யாம் அறிந்த வரையிலே, வேறு எந்த அரசும் மேற்கொள்ளாத ஓர் அரிய திட்டத்தைத் தமிழ்நாடு அரசு தானே முன்னின்று நிறைவேற்ற முடிவுசெய்திருக்கிறது. தமிழில் உள்ள பேரிலக்கியங்களை உலக மொழிகளிலே மொழிபெயர்த்துத் தமிழ்மக்களுடைய பண்பாட்டையும் இலக்கியப் பாங்குகளையும் உலகத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்னும் நோக்கத்தோடும் உலக மொழிகளிலே உள்ள பேரிலக்கியங்களைத் தமிழாக்கம் செய்து தமிழ்மக்களுக்கு அறிமுகம் செய்வதோடு, இத் தமிழாக்கங்கள் தமிழுக்கே புத்துயிரும் புதிய வளமும் நல்கவேண்டுமென்னும் நோக்கத்தோடும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இந்தத் தனிப்பெருந் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். தமிழ்நாடு கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு தொகை செலவானாலும், அவ்வளவையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது என்று பன்முறை அறிக்கைகள் வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 8-5-1978-ல் டாக்டர் திரு. ஜஸ்டிஸ் எஸ்.மகராசன் தலைமையில் கீழ்க்காணும் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட சிறப்பிலக்கிய வல்லுநர் குழு ஒன்றைத் தமிழ்நாடு அரசு நியமித்திருக்கிறது:

1. தமிழ்வளர்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் திரு.கொண்டல் சு.மகாதேவன் அவர்கள் செயலுறுப்பினர். இவர் இரண்டாண்டுகள் செயலுறுப்பினராக இருந்து, அவருக்குப்பின் திரு. டாக்டர் மா. நன்னன்

அவர்களும், அவரையடுத்துத் திரு. சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களும் செயலுறுப்பினராகவும் இருந்துவந்துள்ளனர்.

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள்—உறுப்பினர்.

3. சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழித் துறைத் தலைவர் திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் —உறுப்பினர்.

4. சென்னை சாகித்திய அகாதமியின் தென்மண்டலச் செயலர் திரு. டாக்டர் சி. ஆர். சர்மா அவர்கள் —உறுப்பினர்.

மேற்கண்ட வல்லுநர் குழு உலகத்திலுள்ள பல பல்கலைக் கழகங்களோடு தொடர்புகொண்டு உலகமொழிகளிலே தமிழாக்கத்திற்குத் தகுதியான பேரிலக்கியங்கள் எவை என்று பரிசீலனை செய்துவருகிறது.

தமிழ் இலக்கியங்களில் எவற்றை அயல்மொழிகளில் மொழிபெயர்க்கலாம் என்பதையும் பரிசீலனை செய்து, இரு மொழிப் புலமையும், எழுத்தாற்றலும் பெற்றுள்ள அறிஞர் களைத் தேர்ந்தெடுத்து, தேர்ந்தெடுத்த பேரிலக்கியங்களை மொழியாக்கம் செய்யும் பொறுப்பை வல்லுநர் குழு அவர் களிடம் ஒப்படைத்து வருகிறது. ஆங்கிலமும் தமிழும் நன்றாகக் கற்று, ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத்து வல்லமை பெற்றவர் பலர் இருந்தபோதிலும் பிரெஞ்சு, ஜெர்மன், டச்சு, இத்தாலியன், பெர்சியன், ஸ்பானிஷ், ரஷ்யன் முதலிய மொழிகளில் உள்ள பேரிலக்கியங்களைக் கற்று, அவற்றைத் தமிழாக்கம் செய்வதற்கோ தமிழ்ப் பேரிலக்கியங்களை மேற்சொன்ன மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்கோ வல்லமைபெற்ற அறிஞர்கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. அத்தகைய அறிஞர்கள் வல்லுநர் குழுவுடன் தொடர்புகொண்டு, மொயழிாக்கம்

செய்ய முன்வருவார்களேயானால், அவர்களுக்கு ஆர்வம் ஊட்டி, அவர்களோடு ஒத்துழைக்க இந்த வல்லுநர் குழு தயாராக இருக்கிறது. பத்தாம் நூற்றாண்டு முதல் பதின் மூன்றாம் நூற்றாண்டு வரையில் பிரெஞ்சு நாட்டிலே அயல் மொழிகளில் உள்ள நூல்களையெல்லாம் பிரெஞ்சில் மொழி யாக்கம் செய்து வந்தார்கள். அதன் பயனாக பிரெஞ்சு இலக்கியம் வலுவும், நுட்பமும், மென்மையும் பெற்று உலக இலக்கியங்களிலே முதலிடம் பெற்று நிற்கிறது. வின்சுலோ கூறியபடி, தமிழ்க் கவிதை கிரேக்கக் கவிதையைக் காட்டிலும் மிக்க துல்லியத்தையும் மெருகையும் பெற்றிருந்தபோதிலும், தமிழ் உரைநடை, வேண்டிய அளவு முன்னேறவில்லை. தமிழ் நாடு அரசு தீட்டியுள்ள இந்தத் திட்டத்தின் விளைவாக வெளிவரப்போகின்ற இதைப்போன்ற நூல்கள் தமிழ் மொழியின் மேனியிலே புதிய இரத்த ஓட்டத்தையும் தமிழ் மொழிக்குப் புதுத் தெம்பையும் ஊட்டி, எதிர்கால இலக்கியப் படைப்புகளுக்குப் புத்துயிரும் புத்தார்வமும் நல்கும் என்று நம்பலாம்.

சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புக் குழுவின் பணிக்காலம் நிறைவுற்றமையால் இக் குழுவின் செயலுறுப்பினராக அலுவலர் முறையில் பணியாற்றிய தமிழ்வளர்ச்சி இயக்கு நரால் இந்நூல் அச்சேற்றி வெளிக்கொணரப்படுகிறது.

**சிலம்பொலி சு. செல்லப்பன்**
இயக்குநர்
தமிழ் வளர்ச்சி இயக்ககம்
குறளகம்
சென்னை

# நூல் அறிமுகம்

'யுஜின் ஓ நீல்' என்பவர் புகழ்பெற்ற ஆங்கில இலக்கிய ஆசிரியராவார். இவர் 1936-ல் 'நோபல் பரிசு' பெற்றவர். இவர் எழுதிய 'Emperor Jones' எனும் ஆங்கில நாடக நூல் உலகப் புகழ்பெற்றதாகும். இந் நூலைத் திரு. திருமலைவேலு, எம். ஏ. அவர்கள் 'பேரரசன் ஜோன்ஸ்' எனும் பெயரில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்ப்புப் பணி மிகவும் சிக்கலானதொரு பணியாகும்.

ஒவ்வொரு நாட்டிற்கும், பண்பாட்டில் வேறுபாடிருப்பது இயல்பே. மூலநூலின் கருவை அப்படியே எடுத்துக்கொண்டாலும், அக் கருவை எம்மொழியில் பெயர்த்து எழுதுகிறோமோ அம் மொழியின் — மக்களின் — பண்பாட்டு அமைப்புக்கேற்பக் கையாளுவதில்தான் அம் மொழிபெயர்ப்பு நூலின் வெற்றி அமைந்திருக்கிறது. அவ்வகையில் இந் நூல் ஒரு வெற்றிப் படைப்பாகவே அமைந்திருக்கிறது. 'பேரரசன் ஜோன்ஸ்' எனும் இத் தமிழாக்க நாடக நூலைப் படிப்பவர் 'Emperor Jones' எனும் மூலநூலைச் சுவைத்த முழு உணர்வையே அடைவர் என்பது உறுதி. இந்த நூலை அழகுற அச்சிட்டு உதவிய தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலம்பொலி சு. செல்லப்பன்
இயக்குநர்
தமிழ் வளர்ச்சி இயக்ககம்
குறளகம்
சென்னை

# நாடக மாந்தர்

| | | |
|---|---|---|
| புருட்டஸ் ஜோன்ஸ் | — | பேரரசன் |
| ஹென்றி ஸ்மிதர்ஸ் | — | இலண்டன் மாநகரத்துக் கொச்சை பேசும் வியாபாரி (தீவில் குடியேறி இருப்பவன்) |
| நீக்ரோக் கிழவி | — | (ஓடிவிட முயல்பவள்) |
| லெம் | — | அத்தீவு நீக்ரோக்களின் தலைவன் |

போர்வீரர்கள் மற்றும் லெம்மின் ஆதரவாளர்கள்

சிறிய வடிவமைப்பு இல்லா அச்சங்கள்; ஜெஃப், தண்டனையடைந்து சிறையில் வாழும் நீக்ரோக்கள், சிறைக் காவலன், பண்ணையாள்கள், ஏலக்காரன், அடிமைகள், காங்கோ நாட்டுப் பேயோட்டும் மந்திர வாதி, முதலைக் கடவுள் முதலியோர்.

இக் கதை வெள்ளைக்காரக் கடலோடிகளால் இன்னும் சுயாட்சித் தகுதி வழங்கப்படாத மேற்கிந்தியத் தீவு ஒன்றில் நிகழ்கிறது. அங்குள்ள உள்நாட்டு அரசே தற்போது ஒரு பேரரசாகும்.

# காட்சி 1

## காட்சியமைப்பு

அரச மாளிகையில் பேரரசனின் தர்பார் அறை— ஒரு விசாலமான மேல்தளம்; வெள்ளையடிக்கப்பட்ட ஆனால் அலங்கரிக்கப்படாத சுவர்கள். தரை வெள்ளைநிற ஓடுகளால் ஆனது. பின்னால் அறையின் நடுப்பகுதியில் இடப்புறத்தில் அகன்ற வளைவு வழி ஒன்று, வெண்ணிறத் தூண்களையுடைய வீட்டின் புகுமுக மண்டபத்திற்கு இட்டுச்செல்லுகிறது. அரச மாளிகை துல்லியமாகத் தெரியுமாறு மேட்டு நிலத்தில் அமைந்துள்ளமையை, வீட்டு முகப்புக்கப் பால் தூரத்தேயுள்ள குன்றுக் காட்சிகளும், அவற்றின் முகடுகளில் மகுடமெனக் குழுமியுள்ள நீட்டோலைக் காடுகளும் மட்டுமே தெரிவது தெற்றென எடுத்துக் காட்டுகின்றன. வலப்பக்கத்துச் சுவரின் நடுவில், ஒரு சிறிய வளைந்த வாயில் அரச மாளிகையின் குடியிருப்புப் பகுதிக்குச் செல்லுகிறது. அறையின் நடுவில் செதுக்கிச் செப்பனிடப்படாத பெரிய மர நாற்காலி, அதன் பின்புறம் அறையின் பின்பகுதியை நோக்கி இருக்குமாறு வைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, அறை வேறு எந்தத் தட்டுமுட்டுச் சாமான் களுமின்றிக் காலியாகவே உள்ளது. இதுவே பேரரச னின் அரியணை என்பது தெளிவாகிறது. அதில்

பிரகாசமான கண்ணைப் பறிக்கும் செந்நிற வண்ணம் பூசப்பட்டுள்ளது. இருக்கையில் பளபளப்பான ஆரஞ்சுநிற மெத்தையொன்றும், சிறியதான மற்றொரு கால்மணை, கால்களை வைத்துக்கொள்ள ஏற்றாற் போன்று தரையில் வைக்கப்பட்டுள்ளது. குறுகிய சிவப்புநிறப் பாய்கள் அரியணையின் அடிப்பாகத்தி லிருந்து இரண்டு நுழைவாயிலுக்கும் இட்டுச் செல் கின்றன.

அது பிற்பகலின் பிற்பகுதி. எனினும், பகலவனின் கிரணங்கள் முகப்பு விதானத்திற்கு அப்பாலும் இன்னும் மஞ்சள் நிறமாகத் தகித்துக் கொண்டிருக் கின்றன. காற்றுப் புழுங்குகிறது.

திரை விலகும்போது ஓர் உள்நாட்டு நீக்ரோப் பெண் வலப்புற நுழைவழியிலிருந்து எச்சரிக்கையாக உள்ளே நுழைகிறாள். அவள் மிகவும் முதிய வயதினள்; எளிய வெண்ணிறப் பருத்தித் துணி யால் ஆன உடையினை உடுத்தியுள்ளாள். காலணிகள் இல்லை. சிவப்புநிறக் கைக்குட்டை ஒன்று அவளது நரைமுடியில் சில கற்றைகளைத் தவிர தலைமுழுவதையும் மறைத்துள்ளது. வண்ணத் துணியால் கட்டப்பட்ட சிறு மூட்டை ஒன்று அவளது தோளில் உள்ள ஒரு நீண்ட கழியின் மறு நுனியில் கட்டப்பட்டுள்ளது. கதவிற்கருகே அவள் சற்றுத் தயங்குகிறாள். யாராவது தன்னைப் பார்த்து விடுவார்களோ என்ற அச்சத்தினால் திரும்பிப் பார்க்கிறாள். பிறகு சந்தடியின்றி மெல்ல அடிமேல் அடிவைத்துப் பின்புறக் கதவோரம் செல்கிறாள்.

அக்கணமே வீட்டு முகப்பின்கீழ் ஸ்மிதர்ஸ் வெளிப் படுகிறான்.

ஸ்மிதர்ஸ் ஏறத்தாழ நாற்பது வயதுள்ள நெடி துயர்ந்த மேனியன். அவனது வழுக்கைத் தலை, பெருத்த குரல்வளையை உடைய ஒரு நீண்ட கழுத்தின்மீது குந்தியிருக்கும் ஒரு முட்டையைப் போன்று காணப்படுகிறது.

இயற்கையிலேயே சிறிய கூர்மையான முக உறுப்புகள் அவனுக்கு. மக்கில் செய்ததுபோன்ற முகத்தோல். வெப்ப மண்டலத்துச் சூடு, அந்தத் தோலைத் தொட்டால் ஒட்டிக்கொள்கின்ற மஞ்சள் நிறமாக மாற்றிவிட்டிருக்கிறது. அதோடு நாட்டு ரம் (மது) அவனுடைய கூரிய மூக்கைக் கடும் சிவப் பாக்கிவிட்டிருக்கிறது. அவனது நீர் சொட்டும் சிறிய நீலக்கண்களைச் சுற்றிச் சிவப்பு வளையங்கள் காணப்படுகின்றன. மரநாயின் கண்களைப்போன்ற அவனுடைய கண்கள், கபடமாக அங்குமிங்கும் கூர்ந்துநோக்கித் துழாவுகின்றன. கோழை, ஈவிரக்க மற்ற இழிமகன், ஆபத்தான கொடியன் என்பதைக் காட்டுகிறது அவன் முகத்தோற்றம். பழைய பழுப்பு நிற ட்ரில் துணியாலான சவாரி உடை, காலில் பட்டி, குதிரையோட்டியின் கால்முள், வெண்ணிறக் கார்க் தலைக் கவசம் முதலியவற்றை அவன் அணிந் துள்ளான். இடையில் தோட்டாக்கள் நிறைந்த இடைவாரும், அதில் தானியங்கிக் கைத்துப்பாக்கியும் உள்ளன. கையில் சவாரிச் சாட்டை ஒன்று வைத் திருக்கிறான். அவன் அந்த முதியவளைக் கண்டு விடுகிறான். சந்தேகப்பட்டு அவளைக் கவனிக்க

வேண்டி நிற்கிறான். பின் ஏதோ முடிவுக்கு வந்தவனாகச் சந்தடியின்றி வேகமாகக் காற்பெரு விரலை ஊன்றியவாறே அறையினுள் அடியெடுத்து வைக்கிறான். அந்த மாது பின்னால் திரும்பித் தொடர்ந்து பார்த்துக்கொண்டே சென்றாலும், தன்னை நெருங்கும்வரை அவள் அவனைப் பார்க்கவில்லை. காலம் கடந்துவிட்ட நிலையில் அவள் ஸ்மிதர்ஸைப் பார்க்கிறாள். அவன் அவளை நோக்கிப் பாய்ந்து அவள் தோள்களை வலுவாகப் பிடித்துக்கொள்கிறான். விடுவித்துக்கொள்ள அவள் பலமாக, ஆனால் அமைதியாகப் போராடுகிறாள்.

ஸ்மிதர்ஸ் : (அவனுடைய பிடியை இறுக்கிக் கொண்டே—முரட்டுத்தனமாக) அம்மே! திமிறாதே! அதெல்லாம் நடக்காது என்னிடம். இந்தா குருவி! இப்பொழுது உன்னால் என்னிடமிருந்து தப்பி ஓட முடியாது. என் பிடி உன்மேலிருக்கிறது.

நீக்ரோக் கிழவி : (போராடுவதில் பயனில்லை என்று தெரிந்து, அச்சம் மேலிடக் கட்டுமீறிய நடுக்கத்துடன், அவன் முழங்கால்களைத் தழுவித் தரையில் வீழ்ந்து கெஞ்சியவாறு) அவரிடம் சொல்லிவிடாதே! அவரிடம் சொல்லிவிடாதே, ஐயா!

ஸ்மிதர்ஸ் : (இன்னதென்று புரியாமல் மிகுந்த ஆர்வத்துடன்) அவரிடமா? சொல்லவா? (பின் இறுமாப்பாக) ஓ, மேன்மை தங்கிய அவரா! என்ன விளையாட்டு விளையாடு

கிறாய்? ஏன் திருட்டுத்தனமாக அப்பால் பதுங்கிச் செல்கிறாய்? ஏதோ திருடி இருப்பாய் என்று நினைக்கிறேன். (சவாரிச் சவுக்கினால் குறிப்பாக அவளுடைய துணி மூட்டையைத் தட்டுகிறான்.)

நீ. கிழவி : (அவள் தலையை மும்முரமாக அசைத்துக்கொண்டு) இல்லை. நான் திருடவில்லை.

ஸ்மிதர்ஸ் : அண்டப் புளுகி! அங்கே என்ன நடக்கிறது என்று என்னிடம் சொல்லு? அங்கே ஏதோ மர்மமான காரியங்கள் நடக்கின்றன. வெளியில் என்னவோ நடக்கிறது என்பதை இன்று காலை படுக்கையைவிட்டு எழுந்த உடனேயே காற்றுவாக்கில் தெரிந்துகொண்டேன். கறுப்பர்களே! நீங்கள் ஏதோ உங்கள் பில்லி சூனிய வேலையில் இறங்கி இருக்கிறீர்கள். அவரது இந்த அரசமாளிகை இரத்தம் சிந்தும் கல்லறையாக மாறுகிறது. ஆள்கள் எல்லோரும் எங்கே? (அவள் முகத்தை உம் என்று வைத்துக்கொண்டு பேசாமலிருக்கிறாள். ஸ்மிதர்ஸ் சவுக்கை ஓங்கிப் பயமுறுத்தியவாறு) ஓ, நீ சொல்ல மாட்டாய்! மாட்டாய் நீ? எது என்ன என்பதை உனக்கு நான் காட்டப் போகிறேன், பார்.

நீ. கிழவி : (பதுங்கியவாறு) சொல்கிறேன் ஐயா. என்னை அடிக்காதே. அவர்கள் போய் விட்டார்கள். எல்லோரும் போய்விட்டார்கள். (தொலைவிலுள்ள குன்றுகளை நோக்கிக் கைகளை வீசிச் சைகை செய்கிறாள்.)

ஸ்மிதர்ஸ் : குன்றுகளுக்கா ஓடிவிட்டார்கள்?

நீ. கிழவி : ஆம், ஐயா. அவர் சக்கரவர்த்தி—பெருந் தந்தை. (பழக்கதோடத்தால் இயந்திரம் போன்ற வேகமான ஒரு வலிப்புடன் தன் நெற்றியால் தரையைத் தொட்டவாறு) அவர் சாப்பிட்டபின் தூங்கப் போய் விட்டார். அதன் பிறகு அவர்கள் போனார்கள்—எல்லோரும் போனார்கள். நான் வயதான கிழவி. நான் மட்டும் தங்கிவிட்டேன். இப்பொழுது நானும் கூடப் போகப்போகிறேன்.

ஸ்மிதர்ஸ் : (அவனது மலைப்பு, மிகப் பெரிய ஒரு மட்டரகமான திருப்தியாக மாறுகிறது.) ஓ! இதுதான் அந்தப் பயணமா? நல்லது. வெளியில் என்ன நடக்கிறது என்பதும் அவர்கள் எப்பொழுது குன்றுகளுக்கு ஓடினார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அங்கு விரைவிலேயே பறையொலி கேட்கத் தொடங்கும். (பழி வாங்கும் குரூர மிகுதி தோன்ற) என்னைப் பொறுத்தவரை மகிழ்ச்சிதான்! இவ்

வளவும் வேண்டும் அவனுக்கு! தோரணை பண்ணுகிற இறுமாப்புக்காரன், நாறும் நீக்ரோப் பயல்! மேன்மை தங்கிய அவராமே! கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்! அவனைச் சுட்டுக் கொல்ல அவர்கள் இட்டுச் செல்லும் போது நான் கூட இருக்க வேண்டுமே! (சட்டென) அவன் சுகமாக இங்கே தானே இன்னும் இருக்கிறான், இல்லையா?

**நீ. கிழவி :** ஆம். தூங்குகிறார்.

**ஸ்மிதர்ஸ் :** எழுந்த உடன் அவர் இதையெல்லாம் கட்டாயம் புரிந்து கொள்ளத்தான் போகிறார். தமது கால நேரம் எப்பொழுது வரும் என்பதை முன்கூட்டியே கண்டு கொள்ளும் அளவு தந்திரமுள்ளவர். (வலப்புறக் கதவோரம் சென்று வாயினுள் இருவிரல்களை வைத்துச் சன்னமான குரலில் சீழ்க்கை அடிக்கிறான். கிழவி துள்ளி எழுந்து வாயிலுக்கு வெளியே ஓடுகிறாள். ஸ்மிதர்ஸ் கைத் துப்பாக்கியைப் பிடித்தவாறு பின்புறமாக அவளைப் பின்பற்றிச் சென்று) நில், இல்லையேல் சுட்டுவிடுவேன்! (பின் நின்றவாறே—அசட்டையாக) வேண்டுமானால் ஓடிப் போ, கறுப்பு மாடே. (அவள் போன வழியைப் பார்த்தபடியே வாயிலில் நிற்கிறான்.)

(ஜோன்ஸ் வலப்புறத்திலிருந்து உள்ளே வருகிறான். அவன் ஓர் உயரமான, கட்டமைந்த இரத்தத் துடிப்புள்ள நடுத்தர வயது நீக்ரோ. அவனது, அங்க அமைப்புகள் சாதாரணமான நீக்ரோ இன இலக்கணமுடையவைதாம் எனினும், அவன் முகத்தில் ஏதோ ஒரு தனித் தன்மை தெரிகிறது. உள்ளார்ந்த மனவலிமை, தளராமை, தற்சார்பு, தன்னம்பிக்கை முதலியன பார்ப்போர்க்கு அவனிடம் மரியாதை உணர்வைத் தூண்டுகின்றன. அவனது கண்கள் தந்திரமிக்க அறிவுக் கூர்மை உள்ளவை. சந்தேகவாதி, தட்டிக் கழிப்பவன், நடவடிக்கையில் உய்த்துணரும் திறன் உடையவன். வாரியிறைத்தாற்போல நிறையப் பித்தளைப் பொத்தான்கள், தோள்பட்டைகளில் தங்கத்தாலான கனத்த இராணுவப் பட்டயம், கழுத்துப் பட்டையிலும் மணிக்கட்டருகே சட்டை மடிப்பிலும் பிற இடத்திலும் சரிகைப் பின்னல்கள் இவற்றுடன் கூடிய, வெளிறிய நீலநிற, சீரணி மேல்சட்டை ஒன்றை அணிந்துள்ளான் அவன். அவனது நீண்ட இறுக்கமான இரத்தச் சிவப்புக் கால்சட்டை, பக்கவாட்டில் வெளிறிய நீலநிறப் பட்டையை உடையதாயுள்ளது. உயர்ந்தரகப் பளபளப்பான தோலால் ஆன இழை வாரை உடைய பித்தளைக் குதிமுள் கொண்ட பூட்ஸ், முத்தால் கைப்பிடி போட்ட நீண்ட குழலை உடைய கைத்துப்பாக்கியிட்ட தோலுறையுடன் கூடிய இடைவார் முதலியன, அவனது ஒப்பனைகளைப் பூர்த்தி செய்கின்றன. இத்தனை பகட்டுக்கிடையிலும் அவனது பேராற்றலைக் கேலி செய்ய

இயலாத ஏதோ ஒன்று அவனிடம் உள்ளது. அவனுடைய நடையுடைபாவனையில் ஒரு தோரணை காணப்படுகிறது.)

**ஜோன்ஸ்:** (ஒருவரையும் காணாமல்—தூக்கக்கலக்கத்தில் கண்மூடித் திறந்தவாறு முற்றிலும் எரிச்சலடைந்து—கத்துகிறான்.) துணிந்து என் அரச மாளிகையில் அவ்விதமாக விசிலடித்தவன் யார்? பேரரசனை எழுப்பத் துணிந்தவன் யார்? கறுப்புப் பயல்களா! உங்களில் சிலரது தோலை நிச்சயமாக உரித்துவிடச் செய்கிறேன் பார்.

**ஸ்மிதர்ஸ்:** (தன்னைக் காட்டியவாறு—பாதிப் பயம், பாதி எதிர்க்கிற பாங்கில்) அது உங்களுக்காக என்னால் அடிக்கப்பட்ட விசில். (ஜோன்ஸ் கோபத்தால் புருவங்களை நெரிக்கும்பொழுது) உங்களுக்குச் சொல்லவேண்டிய ஒரு செய்தி இருக்கிறது.

**ஜோன்ஸ்:** (கனிவான மரியாதைத் தோற்றத்தை மேற்கொள்கிறான். ஆனால், வெள்ளைக்காரனை இழிவாக மதிக்கிறான் என்பதை அது மறைக்கத் தவறுகிறது.) ஓ, அது நீங்கள்; திருவாளர் ஸ்மிதர்ஸ் அவர்களா! (அவன் தனது அரியணையில் தனக்கு இயல்பான தோரணையுடன் அமர்

கிறான்.) நீ என்னிடம் சொல்ல அப்படி என்ன செய்தி வைத்திருக்கிறாய்?

ஸ்மிதர்ஸ்: (தனது ஏமாற்றத்தை அனுபவிக்க நெருங்கி வந்து) இன்று இங்கே மர்மம் ஒன்றையும் நீங்கள் கவனிக்கவில்லையா?

ஜோன்ஸ்: (வெறுப்புடன்) மர்மமா? இல்லையே! அந்த வகையில் ஒன்றையும் நான் காணவில்லையே!

ஸ்மிதர்ஸ்: அப்படியானால் நான் நினைத்த அளவு உங்களுக்குத் தந்திரம் போதாது. உங்கள் அரசவைத் திருக்கோலங்கள் எல்லாம் எங்கே? (ஏளனமாக) அந்தத் தளபதிகள், ராஜாங்க மந்திரி வகையறாக்கள் எல்லோரும்தாம்?

ஜோன்ஸ்: (தடுமாறாமல்) அநேகமாக நான் என் கண்களை மூடுகிற நிமிடம் அவர்கள் எங்கே போகிறார்களோ அங்கே— பட்டினத்தில் வெறியூட்டும் சாராயம் குடிக்க, பெருமைபேச. (ஏளனமாக) அதெப்படி உனக்குத் தெரியாமல் போச்சு? அநேகமாக ஒவ்வொரு நாளும் நீயும் அவர்களோடு சேர்ந்து குடிப்பதில்லையாக்கும்!

ஸ்மிதர்ஸ்: (தேள் கொட்டினாற்போன்ற வேதனையுடன் - ஆனால் மெத்தனப்பாங்கில் ஒரு

கண் சிமிட்டலுடன்) அது அந்த நாள் வேலையின் ஒரு பகுதிதானே. நான் அப்படி இருந்தேயாகவேண்டும். என்னுடைய காரியமன்றோ அது ?

ஜோன்ஸ் : (வெறுப்புடன்) உனக்குக் காரியம் ஒரு கேடா?

ஸ்மிதர்ஸ் : (அசட்டுத்தனமாகக் கோபத்தில்) அட கடவுளே, நீங்கள் இங்கு வந்த தொடக்கத்தில் நான் அந்த எத்து வேலைகளில் உங்களை ஈடுபடுத்தியதற்காக என் பேரில் மகிழ்ச்சி அடைந்தீர்கள். அந்த நாள்களில் இந்த உயர்ந்த பெரிய ஆடம்பரங்களெல்லாம் உங்களுக்கு இல்லையே!

ஜோன்ஸ் : (அவன் கை பளிச்செனக் கைத்துப்பாக்கிக்குச்செல்கிறது, அச்சுறுத்தும் பாங்கில்.) வெள்ளையனே மரியாதையாகப் பேசு. நாவை அடக்கு, புரிகிறதா? நான் இப்பொழுது இங்கே தலைவன், மறந்தா பேசுகிறாய்? (இந்தக் கடைசி வார்த்தைகளுக்கெதிராக அந்த இலண்டன் மாநகரத்துக் கொச்சை பேசுகிறவன் சான்றுகளுடன் சவால்விடச் சித்தமாயிருக்கிறான். ஆனால், மற்றவனுடைய கண்களில் உள்ள ஏதோ ஒன்று அவனைக் கட்டுப்படுத்திப் பணியவைக்கிறது.)

ஸ்மிதர்ஸ் : (கோழைத்தனமான முணகல் ஒலியுடன்) தப்பாகச் சொல்லவில்லை பழங்கிழவரே!

ஜோன்ஸ் : (திருவுளங்கொண்டவனாய்) நான் உன்னை மன்னிக்கிறேன். (துப்பாக்கியிலிருந்து கையை விழவிடுகிறான்.) பழைய குப்பையைக் கிளறுவதில் பயனில்லை. நான் அப்பொழுது இருந்த நிலை வேறு; நான் இப்பொழுது இருக்கும் நிலை வேறு. உன் குறுக்கு வழிகளில் அக்காலத்தில் நீ என்னைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டதெல்லாம் அன்பால் அன்று. உனக்காக இழிவான வேலைகளை நான் செய்தேன்; பார்க்கப் போனால் மூளையால் செய்கிற வேலையெல்லாம்கூட நானே செய்தேன். உனக்காக, நீ செலவு செய்த பணத்திற்கு ஈடாக வேலை செய்தேன். அதுதான் காரணம்.

ஸ்மிதர்ஸ் : நல்லது, வாழ்த்துகள். நான் உங்களை முதலில் கைதூக்கிவிட்டேன், இல்லையா? ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சிறையிலிருந்து தப்பி வந்தவர் நீங்கள் என்று மற்றவர்கள் அஞ்சியபோது நான் மட்டும் உங்களை அஞ்சாமல் கூலிக்கு அமர்த்திக்கொண்டேனே.

ஜோன்ஸ் : இல்லை, அதைச் சாக்காக வைத்து நீ என்னைக் குறைத்து மதிப்பிடப் பார்க்

கிறாய். நீயும்கூடப் பலமுறை சிறையில் இருந்தவன் தானே.

ஸ்மிதர்ஸ் : (சீற்றத்துடன்) அது பொய்! (பின் அதிலிருந்து கவனத்தைத் திருப்ப முயன்றவாறு, ஓர் ஏளன முயற்சியில்) களஞ்சியமே! யார் உங்களிடம் இக் கட்டுக்கதையைச் சொன்னது?

ஜோன்ஸ் : எல்லாம் எனக்கு யாரோ சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை; நான் மக்களின் பார்வையிலிருந்தே தெரிந்து கொள்வேன். (பின் சிறிது தயங்கி— சிந்தித்தவாறு) ஆமாம். நீ எனக்கு ஓர் ஆரம்பத்தைக் கொடுத்தாய். நிசம்தான். பிறகு அதிக நாள் ஆகவில்லை, இந்தக் காட்டுக் கறுப்பர்களை எப்படி மடக்கி வழிக்குக் கொண்டு வரவேண்டுமோ அப் படி மடக்கி வழிக்குக் கொண்டுவர. (பெரு மிதத்துடன்) இரண்டே ஆண்டுகளில் கட்டணமில்லாத கள்ளப் பணியிலிருந்து பேரரசன் நிலைக்கு! இது சாகச மில்லையா?

ஸ்மிதர்ஸ் : (வாயைக் கிண்டும் ஆவலுடன்) நீங்கள் உங்கள் பணக் குவியலைப் பத்திரமான இடத்தில் மறைத்து வைத்திருக்கிறீர்கள்; நான் பந்தயம் கட்டுகிறேன்.

ஜோன்ஸ் : (மனநிறைவுடன்) நிசமாகச் செய்திருக் கிறேன். அது வெளிநாட்டு வங்கி ஒன்றில்

பத்திரமாக உள்ளது. எனக்கு எது நேர்ந்தாலும் என்னைத் தவிர யாரும் அதை எடுத்துவிட முடியாது. இந்தப் பேரரசன் பதவியை அதன் ஆடம்பரத்தைக் கருதித் தான் தாங்கிக்கொண்டிருக்கிறேன் என்றா நினைக்கிறாய்? நிச்சயமாக இந்த மிடுக்கும் பெருமிதமும் இப் புதர்வாழ் மட்டரகக் கறுப்பர்களை அடிபணிய வைப்பதற்காகவேதாம். பெரிய சர்க்கஸ் விளையாட்டுக் காட்டினால்தான் அவர்களிடமிருந்து காசைக் கறக்கலாம். அதைச் செய்து காட்டுகிறேன்; பணத்தைப் பெறுகிறேன். (பல்லை இளித்துக் காட்டி) நல்ல வசூல், ஒவ்வொரு நேரமும் எனக்கு! (பின் கடிந்த குரலில்) ஆனால், நீ என்னை வெறுக்கக் காரணம் ஒன்றும் இல்லை. நீ எனக்குச் செய்ததற்கெல்லாம் உனக்குப் பணம் கொடுத்துக் கழித்து விட்டேன். நான் உன்னைக் காப்பாற்றினேன். பட்டப் பகலில் நீ செய்த குறுக்குவழி ஊழல்களைக் கண்டும் காணாததுபோல் இருந்திருக்கிறேனா இல்லையா? நிச்சயமாக இருந்திருக்கிறேன். அதையெல்லாம் தடுக்க அதே நேரத்தில் சட்டங்கள் வேறு போட்டுக் கொண்டு! (நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறான்.)

ஸ்மிதர்ஸ் : (பல்லிளித்தவாறு) நான் குற்றம் சொல்வதாக நினைக்க வேண்டாம்; இப்படியும்

அப்படியுமாக அவர்களைச் சுரண்டிவிட்டீர்கள் சுரண்டி, இல்லையா? அவர்கள் மேல் நீங்கள் விதித்திருக்கும் வரியைப் பாருங்கள்; ஆண்டவனே! நீங்கள் அவர்களைக் கசக்கிச் சக்கையாய்ப் பிழிந்தல்லவா விட்டீர்கள்!

**ஜோன்ஸ் :** (நமட்டுச் சிரிப்போடு) இல்லை. அவர்கள் இன்னும் சக்கையாகி விடவில்லை. நான்தான் இன்னும் இருக்கிறேனே இங்கே, பின் எப்படி ? இல்லையா ?

**ஸ்மிதர்ஸ் :** (அவன் அந்தரங்க எண்ணத்தை உணர்ந்து முறுவலித்தவாறு) இப்போதென்னவோ அவர்கள் உலர்ந்துதான் போயிருக்கிறார்கள் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள். (பேச்சைத் திடீரென மாற்றிக்கொண்டே) நான் சட்டத்தை மீறினேன் என்கிறீர்களே, நீங்கள் மட்டும் என்னவாம்? சட்டத்தை இயற்றிய கையோடு அவற்றை உடைத்தெறிந்தும் இருக்கிறீர்களே!

**ஜோன்ஸ் :** நான் பேரரசன், இல்லையா? சட்டம் இவரைப் பொறுத்துச் செயல்படாது. (நீதிமான் தோரணையில்) நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேள், ஸ்மிதர்ஸ். இந்த உலகில் நீ செய்வதைப் போன்ற சிறிய திருட்டும் உண்டு; நான் செய்வதைப்போன்ற பெரிய திருட்டும்

உண்டு. சிறிய திருட்டாக இருந்தால் என்றாவது ஒரு நாள் சிறையில் தள்ளு வார்கள். பெரிய திருட்டானால் பேரரச னாக்குவார்கள். செத்த பிறகு புகழ் மண்டபத்தில் வே று வைப்பார்கள். (கடந்த காலத்தை எண்ணியவனாய்). அமெரிக்கப் புகைவண்டியின் துயில் வதற்கான சொகுசு வண்டியில் கழித்த பத்தாண்டுகளிலும் மேட்டுக்குடி வெள்ளையர்கள் பேசியதைக் கேட்டுக் கேட்டு நான் ஒன்று கற்றேனென்றால் அது இப்போது சொன்னேனே இந்த உண்மைதானப்பா. அதைப் பயன் படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததும், இரண்டே ஆண்டுகளில் பேரரசனாகி விட்டிருக்கிறேன் என்றால் பாரேன்!

**ஸ்மிதர்ஸ் :** (பெரிய மீனைப் பார்த்துச் சின்ன மீன் மெச்சுதல்போல அடக்க முடியாத மெச்சுதலுடன்) ஆமாம்! அந்தச் சரி யான சீட்டைப் புரட்டினீர்கள் நீங்கள், நிசந்தான். ஆனால் கடவுளே, உங் களுக்கு அடித்த யோகம்போல இப்படி ஓர் அழகு யோகம் எந்தப் பயலுக்கும் அடித்ததை நான் பார்த்ததே இல்லை!

**ஜோன்ஸ் :** (கடுமையாக) யோகமாவது? இதில் என்ன வந்தது யோகம்?

**ஸ்மிதர்ஸ் :** ஏதோ வெள்ளியால் செய்த துப்பாக்கிக் குண்டு என்று ஒரு வெற்று வேட்டு

விட்டீர்களே, அது யோகமில்லையா? உங்களுக்கு எதிராகப் புரட்சி நடந்த போது, அதுவன்றோ இந்த முட்டாள் கறுப்பர்களை உங்கள் பக்கம் சேர்த்தது!

ஜோன்ஸ் : (ஒரு சிரிப்புடன்) ஓ! அந்த வெள்ளிக் குண்டுச் சேதியா? நிச்சயமாக அது நல்ல யோகம்தான்! ஆனால், அந்த யோகம் நானே உண்டாக்கின யோகம், காதில் விழுகிறதா? பகடையில் நானே கோல்மால் செய்தேன்; ஆமப்பா செய் தேன்! அந்தக் கொலைகாரக் கறுப்பன், கிழப்பயல் லெம், என்னைக் கொல்ல ஒரு பயலைக் கூலிக்கு அமர்த்தி அவனும் 10 அடித் தூரத்திலிருந்து என்னைக் குறி வைத்தான். துப்பாக்கிதான் ஏனோ வெடிக்கவில்லை. நான் அவனைச் சுட்டுக் கொன்றேன். நான் சொல்வது காதில் கேட்கிறதா?

ஸ்மிதர்ஸ் : உங்களிடம் ஏதோ மந்திர சக்தி இருக் கிறது. அதனால்தான் எந்த ஈயக் குண்டும் உங்களைக் கொல்லாது என்றீர்கள். உங்கள் உடல் வலிமைக்கு, ஒரு வெள்ளிக் குண்டு மட்டுமே உங்களைக் கொல்ல முடியும் என்று, அவர்களிடம் சொன்னீர்கள். கடவுளே, அது உங்கள் வெற்றுவேட்டு இல்லையா— அது கண்கண்ட யோகம்—குருட்டு முட்டாள் யோகம், இல்லையா?

ஜோன்ஸ் : (பெருமிதத்தோடு) எனக்கு மூளை இருக்கிறது. அதைச் சட்டெனப் பயன் படுத்துகிறேன். அது ஒன்றும் யோகம் இல்லையே.

ஸ்மிதர்ஸ் : வெள்ளிக் குண்டு எந்த விதத்திலும் அவர்களுக்குக் கிடைப்பதரிது என்பது உங்களுக்குத் தெரியும். அன்று உங்களை அவன் சுட்டுத் தள்ளவில்லை என்பது உங்களுடைய யோகம்தானே!

ஜோன்ஸ் : (சிரித்துக்கொண்டே) அந்த முழு முட்டாள்கள், புதர்க் கறுப்பர்கள் அத்தனை பேரும், என்முன் முழங் காலிட்டுத் தரையில் மோதி என்னை ஏதோ பைபிளில் உள்ள அற்புதமாக்கி வைத்திருக்கிறார்கள். அட ஆண்ட வனே! அன்றிலிருந்து அவர்கள் யாவரும் எனது அரவணைப்பில்தான் போ. சாட்டையைச் சொடுக்குகிறேன். வளை யத்தில் பாய்ந்துவிடுகிறார்கள்.

ஸ்மிதர்ஸ் : (வெறுப்புக் காட்டும் வகையில் மூச்சை வெளியே விட்டு) உங்கள் அமெரிக்கப் பட்டணக்கரை செய்த எத்துவேலை இது.

ஜோன்ஸ் : மக்கள் தம்மை நம்பச் செய்வதுவரை ஒருவனுடைய சண்டப் பிரசண்டப் பேச்சுகளே அவனைப் பெரிய மனித

னாக்கப் போதுமில்லையா? கையில் சரக்கில்லாமலே பெரும்பேச்சுப் பேசுவேன், நிசம்தான். ஆனால், அதற்காக வெறும் தான்தோன்றித் தனமாகப் பேசுவதில்லை. அவர்களை ஏமாற்ற முடியும் என்பது எனக்குத் தெரியும் — அதை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறேன். அது போதும், என் வியாபாரத்தில் என்னைத் தாங்க. நான் அவர்களிடம் பேசுமுன் அவர்களுடைய மொழியைக் கற்று, அவர்களில் சிலருக்கு ஆங்கிலமும் சொல்லிக் கொடுத்தாக வேண்டாவா? அது உழைப்பில்லையா? ஸ்மிதர்ஸ்! நீ இங்கு இருந்திருக்கும் இந்தப் பத்தாண்டுக் காலத்தில், அவர்கள் மொழியில் அவர்கள் பேச்சில் ஒரு வார்த்தையேனும் படிக்கவில்லை, இல்லையா? அப்படிப் படித்து, அவர்களோடு கொடுக்கல் வாங்கல் செய்வது அத்தனையும், மடியில் கட்டிய ரொக்கப் பணம் என்று உனக்குத் தெரிந்திருந்தும் நீ படிக்கவேயில்லை. நீ ஒரு கையாலாகாதவன், ஸ்மிதர்ஸ். உழைக்க மாட்டாய், பொறுப்பற்ற ஆள்.

**ஸ்மிதர்ஸ்:** (நாணியவனாய்) என்னைப்பற்றிய கவலையை விடுங்கள். உங்களுக்காகவே உண்மையாக நீங்கள் வார்த்து வைத்திருக்கும் ஒரு வெள்ளிக்குண்டைப்பற்றிக் கேள்விப்படுகிறேனே, அது என்ன?

ஜோன்ஸ் : அதுதான் என் அண்டப்புளுகின் உச்சக் கட்டம். அந்த வெள்ளிக்குண்டை நான் வார்த்து வைத்திருக்கிறேன், உண்மை தான். காலம் வரும்போது அதைக் கொண்டு என்னையே நான் முடித்துக் கொள்வேன் என்று அவர்களிடம் சொல்லியும் இருக்கிறேன். ஏன் ? என்னைத் தீர்த்துக்கட்ட இந்த உலகத் தில் என்னைவிட வலியவன் எவனு மில்லை என்பதால், அப்படியொன்று வார்த்து வைத்திருக்கிறேன் என்று அவர்களிடம் சொல்லியும் இருக் கிறேன். அதனால் அவர்கள் என்னைக் கொல்ல முயல்வதில் எந்தப் பயனும் இல்லை என்ற உடனேயே கீழே விழுந்து தலையைத் தரையில் மோதி வணங்கத் தொடங்கிவிட்டனர். (அவன் சிரிக் கிறான்.) நான் இப்படிச் செய்தபின் தான் நிம்மதியாக என்னால் உலாவ முடிகிறது. இல்லையென்றால் பொறாமைக்கார நீக்ரோ எவனாவது மரங்களுக்குப் பின்னால் ஒளிந்து நின்று, என்னைச் சுட்டுவிடுவான், மாட்டானா?

ஸ்மிதர்ஸ் : (வியப்படைந்தவனாய்) அப்போ, நிச மாகவே அதைச் செய்து வைத்திருக் கிறீர்கள்—சத்தியமாகவா?

ஜோன்ஸ் : நிச்சயமாகச் செய்து வைத்திருக்கிறேன். இங்கே இருக்கிறாள் அவள். (அவன்

கைத்துப்பாக்கியை வெளியே எடுத்து, அதை ஒடித்து அதில் ஓர் அறையிலுள்ள வெள்ளிக் குண்டை வெளியே எடுக்கிறான்) ஐந்தும் ஈயம். இறுதியாக இதோ இவ் வெள்ளிக் குழந்தை. இவள் அழகாக மின்னவில்லையா? பார்! (கையில் தூக்கிப் பிடித்து ரசித்தவாறு, அதன் விசித்திரமான கவர்ச்சியிலிருந்து தப்ப முடியாமல் பார்வையாலேயே கட்டுண்டதுபோல் இருக்கிறான்.)

**ஸ்மிதர்ஸ் :** நானும் கொஞ்சம் பார்க்கட்டுமா? (அதனைப் பெறுவதற்குத் தன் கையை நீட்டுகிறான்).

**ஜோன்ஸ் :** (கடுமையாக) வெள்ளைக்காரா, உன் கைகள் இருக்கிற இடத்திலேயே இருக்கட்டும். (வெள்ளிக்குண்டை மீண்டும் அதன் அறையில் வைத்துப் பூட்டிக் கைத்துப்பாக்கியை இடையில் செருகுகிறான்.)

**ஸ்மிதர்ஸ் :** (உறுமிக்கொண்டே) அட ஆண்டவனே! நான் ஒரு மட்டமான திருடன் என்றா நினைக்கிறீர். நீர் நினைப்பீர் தான்.

**ஜோன்ஸ் :** அதன்று, என்னிடமிருந்து இதைத் திருடத் துணியமாட்டாய் நீ என்பது எனக்குத் தெரியும். யாரையும் இந்தக் குழந்தையைத் தொட அனுமதிப்ப

திலலை, அவ்வளவேதான். இவள் என் மந்திரத் தாயத்து, புரிந்துகொள்.

**ஸ்மிதர்ஸ் :** (இகழ்ச்சியாக) ஓர் அழகான மந்திரம் தான், என்ன? (நச்சுத்தனமாக) நல்லது, விரைவிலேயே உங்களிடமுள்ள மந்திர சக்திகளெல்லாம் உங்களுக்குத் தேவைப் படும். கடவுள்தான் உங்களைக் காப் பாற்றவேணும்.

**ஜோன்ஸ் :** (தோரணையோடு) ஓ! அவர்களுக்கு என் விளையாட்டுப் புளித்துப்போக இன்னும் ஆறு மாதங்களாவது ஆகும். பிறகு ஆபத்து வரும் என்று கண்டு கொண்டால் நான் மெல்ல நழுவி விடுவேன், பார்.

**ஸ்மிதர்ஸ் :** ஓ! அதற்கான எல்லாத் திட்டங்களையும் நீங்கள் தீட்டிவிட்டீர்கள், இல்லையா?

**ஜோன்ஸ் :** நான் ஒன்றும் முட்டாள் இல்லை, ஸ்மிதர்ஸ். இந்த மன்னர் மன்னன் பதவிக்காலம் கொஞ்சகாலம்தான் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் கிறேன். ஆயுள் முழுவதும் நான் இந்தப் பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பேன் என்றா நினைக்கிறாய்? இல்லை அப்பனே இல்லை! இந்தப் பாழாய்ப்போன நாட்டில் பணத்தை வைத்துக்கொண்

டிருப்பதில்தான் என்ன பயன், சொல். நான் செலவு செய்வதாக இருந்தால் ஏதாவது காரியம் நடக்கிறதாக இருக்கவேண்டும். என்னை இந்தக் கறுப்பர்கள் அனுப்பிவைக்கப்போவதை நான் பார்த்துவிட்டால் அந்த இடத்திலேயே பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டுப் பணத்தை மட்டும் சுருட்டிக்கொண்டு ஒரு கணத்தில் ஓடிவிடுவேன்.

ஸ்மிதர்ஸ் : எங்கேயோ?

ஜோன்ஸ் : உனக்குத் தேவையில்லாத செய்தி.

ஸ்மிதர்ஸ் : மறுபடியும் அந்தப் பாழாய்ப்போன அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கன்று, நான் சத்தியம் செய்கிறேன்.

ஜோன்ஸ் : (ஐயத்தோடு) ஏன் கூடாது? (பின் மெல்ல இயல்பாகச் சிரித்து) நான் சிறைச்சாலையிலிருந்து தப்பியவன் என்ற என்னைப் பற்றிய கதை காரணமாகவா? அது எல்லாம் வெறும் பேச்சு.

ஸ்மிதர்ஸ் : (நம்பாதவனைப்போல்) ஓ! ஆமான்னேன்!

ஜோன்ஸ் : (சுரீரென்று) நான் ஒரு பொய்யன் என்று நீ மறைமுகமாக என்னைப் பழித்துப் பேசவில்லையே?

ஸ்மிதர்ஸ் : (அவசரமாக) இல்லை, கடவுள் என்னைக் கேட்கட்டும்! நீங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வெள்ளை யர்களைக் கொன்றதைப்பற்றி இந்தக் கறுப்பர்களிடம் சொன்ன பாழாய்ப்போன பொய்யை அன்றோ எண்ணிக்கொண் டிருந்தேன் ஐயா.

ஜோன்ஸ் : (கோபமாக) அவை எப்படிப் பொய்யாகும், சொல்.

ஸ்மிதர்ஸ் : கொலை செய்திருந்தால்தான் சிறையில் இருந்திருப்பீர்களே, அப்படிச் சிறையில் இருந்தீர்களா? (சற்றுக் கடுமையாக) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு நீக்ரோ ஒரு வெள்ளையனைக் கொல்வது என்பது நான் கேள்விப்பட்ட வரைக்கும் அந்தக் கறுப்பன் உடம்புக்கு அது அவ்வளவு நல்லதன்று. கொதிக்கும் எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுத்துவிடுவார்கள் எடுத்து. பின்னே மாட்டார்களா?

ஜோன்ஸ் : (பயங்கர அமைதியுடன்) என்னைப் பீதியடையச் செய்யச் சுற்றிச் சூழ்ந்து நின்று அடித்துக் கொல்வார்கள் என்கிறாய். நல்லது, நான் இப்பொழுது உனக்கு ஒன்று சொல்கிறேன் கேள் ஸ்மிதர்ஸ். நான் அங்கே ஒரு வெள்ளை யனைக் கொன்றிருக்கலாம், கொன்றே

இருக்கிறேன். இந்த இடத்தில் இன்னும் ஒரு வெள்ளையனை இப்போதே கொல்ல வேண்டியிருக்கும் போலிருக்கிறது; அவன் கொஞ்சம் சுதாரித்துக் கொள்ளா விட்டால்.

**ஸ்மிதர்ஸ் :** (ஒரு சிரிப்பை வெளிக்கொணர முயன்று) சும்மா விளையாட்டாகத்தானே சொன்னேன். கேலியைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாதா? இப்பொழுதுதானே சொன்னீர்கள் நீங்கள் ஒருபோதும் சிறையில் இருந்ததில்லை என்று!

**ஜோன்ஸ் :** (அதே குரலில்—கொஞ்சம் தற்பெருமையோடு) ஒரு பகடைக்காய்ச் சூதாட்டத்தில் வாக்குவாதம் முற்றிச் சவரக் கத்தியால் மோதிக்கொண்டதில் நான் சிறைக்குச் செல்ல நேர்ந்திருக்கலாம். அந்தக் கலப்புப்பிறவி மனிதன் இறந்ததால் நான் இருபது ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றிருக்கலாம். சாலையில் வேலை செய்யும்பொழுது சிறைக்காவல் கண்காணியிடம் மற்றொரு வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கலாம். அவன் என்னைச் சவுக்கினால் அடிக்க, நான் அவன் மண்டையை மண்வாரியால் பிளந்து, பின் கால் விலங்குகளை ராவி உடைத்தெறிந்துவிட்டுப் பத்திரமாகத் தப்பி ஓடி இருக்கலாம். நான் அப்படி

யெல்லாம் செய்திருக்கலாம், செய்யாமலும் இருக்கலாம். நான் எப்படிப்பட்டவன் என்பதை நீ புரிந்துகொள்ளவே இதையெல்லாம் சொல்கிறேன். இதில் ஒரு வார்த்தையை நீ திரும்பச் சொன்னாலும், இந்த உலகத்தில் நீ மேலும் திருட்டு வேலை செய்வதை மிக விரைவிலேயே முடித்து வைத்துவிடுவேன் ஜாக்கிரதை.

ஸ்மிதர்ஸ் : (திகிலடைந்தவனாய்) உடன் கூட்டாளியான உங்களை நான் காட்டிக் கொடுப்பேன் என்று நினைக்கிறீர்களா? அப்படிச் செய்கிற ஆள் நான் இல்லை! எப்பொழுதும் நான் உங்கள் நண்பனாகத்தானே இருந்திருக்கிறேன், இல்லையா ?

ஜோன்ஸ் : (சட்டெனத் தளர்ந்தவாறு) நிசம்தான். நீ அப்படித்தான் இருந்திருக்கிறாய்—தொடர்ந்து நீ அப்படியே இருப்பது உனக்கு மிகவும் நல்லது.

ஸ்மிதர்ஸ் : (அமைதியையும்—அதனோடு அவனது பழிவாங்கும் எண்ணத்தையும் மீளப் பெற்றவனாக) நான் தங்கள் நண்பன் என்பதைக் காட்டிக்கொள்ள — நான் சொல்லவந்த—அந்தச் சிறு செய்தியைச் சொல்லப்போகிறேன் இப்போது.

ஜோன்ஸ் : நடத்து! செய்தியைப் போட்டு உடை. நீ மகிழ்ச்சியாகக் காணப்படுவதிலிருந்து

அந்தச் செய்தி கெட்ட செய்தியாகத்தான் இருக்கவேண்டும்.

ஸ்மிதர்ஸ் : (எச்சரிக்கையாக) நீங்கள் ராஜிநாமாச் செய்யவேண்டிய காலம் நெருங்கி இருக்கிறதுபோல் தோன்றுகிறது—ஜொலிக்கும் உங்கள் வெள்ளிக்குண்டோடும்தான், என்ன ? (அவன் ஓர் ஏளனச் சிரிப்புடன் முடிக்கிறான்.)

ஜோன்ஸ் : (தடுமாறியவனாய்) நீ என்ன சொல்கிறாய் ? தெளிவாகச் சொல்.

ஸ்மிதர்ஸ் : இன்று இங்கே காவலர்களோ வேலையாள்களோ எவரும் கண்ணில்படவில்லை, நான் பார்க்கவில்லை ஐயா.

ஜோன்ஸ் : (அசட்டையாக) அவர்கள் எல்லாம் வெளியே தோட்டத்து மரங்களுக்கு அடியில் தூங்கிக்கொண்டிருப்பார்கள். நான் தூங்குகிறபோது என்னை ஏமாற்றியதாக நினைத்து அவர்களும் தூங்குகிறார்கள். இதைத் தெரிந்திருந்தும் தெரியாதவனைப்போல் நானும் நடிக்கிறேன். மணியை அடிக்க வேண்டியதுதான் தாமதம். தாங்கள் எப்பொழுதும் விழித்தே இருந்தனர் என்ற புளுகலுடன் ஓடோடி வருகிறார்கள் என்றால் பாரேன்!

ஸ்மிதர்ஸ் : (அதே கேலிக்குரலில்) இப்பொழுது மணியைக் கொஞ்சம் அடித்துக்

காட்டுங்களேன். நான் என்ன சொல்கிறேன் என்பதை நன்றாகத் தெரிந்து கொள்வீர்கள்.

**ஜோன்ஸ் :** (அதிர்ச்சியால் விழிப்புற்று, ஆனாலும் அதே அசட்டையான தோரணையில் தொடர்ந்து) இதோ, மணியை அடிக்கிறேன் பார். (அரியணைக்கு அடியில் கையை நீட்டிச் சாதாரண பெரிய சாப்பாட்டு மணியொன்றினை வெளியே இழுக்கிறான். அதில் அரியணையைப் போன்றே துல்லிய செஞ்சிவப்புச் சாயம் பூசப்பட்டுள்ளது. மணியை அவன் பலமாக அடிக்கிறான்—நிறுத்தி உற்றுக் கேட்கிறான். பின் கதவுகளிரண்டிற்கும் அருகே அவன் செல்கிறான். மீண்டும் அடித்துவிட்டு வெளியே பார்க்கிறான்.)

**ஸ்மிதர்ஸ் :** (பகைமை கலந்த திருப்தியுடன் அவனைப் பார்த்தவாறு, கொஞ்சம் பொறுத்து — கேலியாக) பாழாய்ப்போன கப்பல் மூழ்கிக்கொண்டிருக்கிறது. நாசமாய்ப்போன எலிகள் நங்கூரம் தூக்குகின்றன.

**ஜோன்ஸ் :** (மணியைக் கடுங்கோபத்தில் சரேலென விட்டெறிய அது கடகடவென உருண்டோடி ஒரு மூலையில் வீழ்கிறது.) தரங்கெட்ட காட்டுக் கறுப்பர்கள்! (பின், ஸ்மிதர்ஸின் பார்வை தன்மீது பதிந்திருப்

பதைப் பார்த்ததும் தன்னைக் கட்டுப் படுத்தியவனாய் ஓர் எக்காளச் சிரிப்பு வெடித்துவர) இத் தடவை ஆட்டத்தில் தூக்கலாகக் கேட்டுத் தப்பாட்டம் ஆடி விட்டேன். ஒருவன் ஒவ்வொரு தடவையும் கிட்டே வராத குட்டைவால் ஜாதிச் சீட்டு வரிசையை, வரிசை என்று காட்டி மேசைப் பணத்தை வாரிக்கொண்டே போக முடியாதுதான். இன்னும் ஆறு மாதங்கள்வரை இந்த அரியணையில் நான் அமர்ந்திருப்பேன் என்றா சொன்னேன் உன்னிடம்! நன்று, இப்பொழுது நான் என் மனத்தை மாற்றிக்கொண்டு விட்டேனப்பா. இதோ தோல்வியை ஒப்புக்கொண்டு இந்தப் பேரரசன் பதவியை இந்த நிமிடமே ராஜிநாமாச் செய்கிறேன்.

ஸ்மிதர்ஸ்: (உண்மையான வியப்புக் கலந்த பாராட்டலுடன்) பெருந்தகையே, ஆனாலும் நீங்கள் எதற்கும் தயங்காத ஆள் தான்! சந்தேகமேயில்லை.

ஜோன்ஸ்: வீணாக அலட்டிக்கொள்வதில் பயன் இல்லையப்பா. விளையாட்டு இவ்வளவு தான் என்று கண்டுகொண்டால் அதற்கு முத்தம் கொடுத்து வழியனுப்பிவிட்டு மேலும் காத்துக்கொண்டிராமல் ஓடிவிட வேண்டும். அவர்கள் எல்லாம் குன்றுகளுக்கு ஓடிவிட்டார்கள், இல்லையா?

ஸ்மிதர்ஸ் : ஆம். முதுகிழத்திலிருந்து முட்டைவரை.

ஜோன்ஸ் : அப்படியானால், புரட்சி கோட்டையை நெருங்குகிறது என்று அர்த்தம். மாமன்னனும் தன் தடத்தைப் பிடித்து வழிநடப்பதுதான் சரி. (பின்புற வாயிற் கதவினை நோக்கி நகரத் தொடங்கு கிறான்.)

ஸ்மிதர்ஸ் : குதிரையைச் தேடிச் செல்கிறீர்களாக்கும்! நீங்கள் இப்பொழுது அதனைக் காண முடியாது. முதல் காரியமாக அவர்கள் குதிரைகளைத்தாம் திருடியிருக்கிறார் கள். காலையில் நான் என்னுடைய குதிரையைக் காணச் சென்றபொழுது அதையும் காணவில்லை. என்ன நடக் கிறது என்பதைப் பற்றிய சந்தேகத்தை முதலில் அதுதான் கொடுத்தது.

ஜோன்ஸ் : (ஒரு கணம் அதிர்ந்து போனவனாய்த் தலையைச் சொறிகிறான். பின் ஒரு வேதாந்தியின் பாவனையோடு) பரவா யில்லை, நான் நடந்தே போகிறேன். பாதங்களே, உங்கள் கடமையைச் செய் யுங்கள். (தங்கக் கைக்கடிகாரம் ஒன்றனை வெளியே இழுத்துக் கூர்ந்து நோக்குகிறான்.) மூன்று முப்பது. ஆறரை மணி வாக்கில்தானே சூரியன் மறை கிறான். (கைக்கடிகாரத்தைத் திரும்ப வைக்கிறான்—ஆழ்ந்த தன்னம்பிக்கை

யுடன்) மெல்ல நடந்தாலும் போதும், வேண்டிய அவகாசம் உள்ளதே.

ஸ்மிதர்ஸ் : அப்படியொன்றும் மெத்தனமாக இருக்க வேண்டா. அவர்கள் ஒட்டுமொத்த மாக ஒன்றாகத் திரண்டு உங்களைத் தொடருவார்கள். லெம் கிழப்பயல்தான் இந்த விஷப் பரீட்சைக்கெல்லாம் தலைவன். உங்களை நரகத்துக்குச் சமமாக வெறுக்கிறான். உணவை வெறுத்துச் சாப்பாட்டை விட்டுவிட்டுக் கூட உங்களைத் தொலைத்துக்கட்ட விரும்புகிறான்; செய்யக் கூடியவன் வேறு.

ஜோன்ஸ் : (இகழ்ச்சியாக) ஓ! அந்த முட்டாள்; உப்புச் சப்பற்ற நீக்ரோப் பயல்! அவனைக் கண்டா நான் பயப்படு கிறேன்? அப்படியா நீ எண்ணுகிறாய்? இதற்குமுன் பலமுறை அவனைத் தலை கீழாக நிறுத்தி வைத்திருக்கிறேன். என் வழிக்குக் குறுக்கே அவன் வந்தால் மீண்டும் அப்படிச் செய்வேன்............ இல்லையேல் (அகங்காரத்தோடு) இம் முறை நான் அவனை ஒரு நீக்ரோப் பிணமாக்கி விட்டுத்தான் போவேன், நிச்சயமாக.

ஸ்மிதர்ஸ் : நீங்கள் அந்தப் பெரிய காட்டையன்றோ கடக்கவேண்டும்! இந்தக் கறுப்பர்கள், வேட்டை நாய்கள் மோப்பம் பிடிப்பதைப்

போன்று இருட்டில் ஒரு தடத்தைத் தொடர்ந்து மோப்பம் பிடித்து வருவார்களே! இந்த உள்நாட்டானைப் போன்று காட்டில் எல்லா வழிகளையும் தெரிந்து வைத்திருந்து வேகமாகச் சென்றாலும்கூடக் காட்டைக் கடக்கப் பன்னிரண்டு மணி நேரம் ஆகுமே.

**ஜோன்ஸ் :** (சீற்றம் கலந்த இகழ்ச்சியுடன்) இங்கே பார், வெள்ளையனே! என்னை நீ என்ன பிறவிமுட்டாள் என்றா எண்ணுகிறாய்? கடவுள்மேல் ஆணையாக! எனக்கும் புத்தியிருக்கிறது என்பதை மதித்து ஒத்துக்கொள். இதைப்பற்றி முன்கூட்டியே அறிந்து எல்லா வழிகளையும் நன்கு உறுதிசெய்து வைத்திருக்கிறேன் நான் என்று உன்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லையல்லவா? இதற்குமுன் பலமுறை வேட்டையாடுவதாக நடித்து இந்தப் பெரிய காட்டினுள் சென்று அதன் மேடு பள்ளங்களையெல்லாம் ஒரு புத்தகத்தைப் படிப்பதுபோல் படித்து வைத்திருக்கிறேன். கண்ணைப் பொத்திக்கொண்டு அக் காட்டுப்பாதைகளினூடே நான் செல்வேன். (மிகுந்த வெறுப்புடன்) இந்தக் காட்டுமிராண்டிக் கறுப்பர்கள் தங்கள் சொந்தப் பெயரையே சரியாகத் தெரிந்துகொள்ள மூளையற்றவர்கள்,

இவர்களா புரூட்டஸ் ஜோன்ஸைப் பிடித்துவிடுவார்கள் என்று நீ நினைக்கிறாய்! ஹூ, நான் எதிர்பார்க்கவில்லையப்பா! உன் உயிர்மேல் ஆணையாக முடியாது! ஏனப்பா! வெள்ளையர்களே நான் தப்பி ஓடிய இடத்திலிருந்து ஜாதி வேட்டை நாய்களுடன் என்னைப் பின் தொடர்ந்தார்கள். அவர்களையே கேலி பண்ணிவிட்டு வந்தவன் நான். இந்தக் கறுப்புக் குப்பைப் பசங்களோடு கண்ணாமூச்சி விளையாடுவதே வெட்கக்கேடு. அவ்வளவிற்கு அப்பாவிகள் அவர்கள். என்னைக் கவனித்து வாப்பா, நீ! நான் அவர்களை, அவர்கள் சலித்துப் போகும் வரை இழுத்தடிக்கிறேன், செய்கிறேன் நான்! இருட்டுவதற்குமுன் பரந்த வெளியைக் கடந்து காட்டின் ஓரத்திற்குப் போய்விடுவேன். ஒருமுறை காட்டுக்குள் இரவில் புகுந்துவிட்டால், இந்தக் குழந்தையைக் காணும் சந்தர்ப்பம் அவர்களுக்கு ரொம்ப அழகாகக் கிடைக்குமே, அழகாக! நாளை அதிகாலை காட்டின் மறுபகுதியை அடைவேன். அங்குள்ள கடற்கரையில் ஃபிரெஞ்சு நாட்டுத் துப்பாக்கிப் படகு தங்கி இருக்கிறது. அது என்னை ஏற்றிக்கொண்டு, மார்டீனிக்யூவிற்குச் செல்லும். அங்குச் சென்றுவிட்டால் என் சேமிப்புப் பணமும் நானும் பத்திரமாக இருப்போம். ஒரு மரக்

கட்டையை உருட்டிவிடுவதைப் போன்று இதுவெல்லாம் எனக்கு எளிது.

ஸ்மிதர்ஸ் : (பழிவாங்கும் எண்ணத்தில்) ஆனால், ஏதாவது தவறு நேர்ந்து உங்களை அவர்கள் பிடித்துக்கொண்டால்!

ஜோன்ஸ் : (தீர்மானமாக) அவர்களால் முடியாது— இதுதான் பதில்.

ஸ்மிதர்ஸ் : ஆனால், ஏதோ பேச்சுக்காகத்தான்— நீங்கள் என்ன செய்வீர்களோ?

ஜோன்ஸ் : (புருவங்களை நெரித்தவாறு) அந்த அற்பக் காட்டுமிராண்டிக் கறுப்பர்களுக்குப் போதும் இந்தத் துப்பாக்கியில் வைத்திருக்கும் ஐந்து ஈயக்குண்டுகள்— அதற்குப் பிறகும் அவர்கள் என்னைப் பிடிக்க வந்தால் அவர்கள் ஆசையில் மண்ணைப்போட அந்த வெள்ளிக் குண்டையும் வைத்திருக்கிறேன்.

ஸ்மிதர்ஸ் : (ஏளனம் செய்தவாறு) ஹோ, நான் அந்த வெள்ளிக்குண்டை மறந்துபோய் விட்டேனே. நல்ல தோரணையோடு தான் உங்களை நீங்கள் கொன்று கொள்வீர்கள், இல்லையா ஐயனே!

ஜோன்ஸ் : (மனக்குமுறலுடன்) இந்தக் காரியத்தில் உன்னிடமுள்ள பணத்தை எல்லாம்

வைத்துப் பந்தயம் கட்டிப்பார் வெள்ளை யனே. வெளியேறிவிட்டால் கடைசி வரை தன் முழு விளையாட்டையும் இந்தக் குழந்தை விளையாடியே தீரும். வெளியேறுகிறபோது அதற்கே உரிய தடபுடல்களோடுதான் வெளியேறவும் செய்யும். போவதென்று வந்துவிட்டால் வெள்ளிக்குண்டுகூடப் போதாது அவனுக்கு—இதுவே விடைசொல்லிக் கொள்வதாக இருக்கட்டும், சரிதானே அது! (பின் அவனது பலவீனத்தை உதறித் தள்ளி ஒரு நம்பிக்கையூட்டும் புன்சிரிப்புடன்) சரிதான்! நான் எதைப் பற்றியோ பேசிக் கொண்டிருக்கிறேன். அவ்வளவு தூரத்திற்கா வந்துவிட்டேன்! நிச்சயமாக இல்லை. இன்னும் இங்குள்ள உன்னுடைய இந்த நீக்ரோப் பதர் களிடமா இவ்வளவும். (தற்புகழ்ச்சியாக) எந்த வகையிலும் வெள்ளிக்குண்டு எனக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரத் தான் போகிறது. எதையும், அவற்றையும் மிஞ்சி ஊகிக்க, செல்ல, மீறிப் போராட வெல்லாம் முடியும் என்னால்; இரவானா லும் பகலானாலும் எந்த நேரத்திலும் இந்தப் பசங்கள் அத்தனை பேரையும் கோதாவிலிறக்கி அவர்கள் பிடிக்க முடி யாதபடி ஓடி, விளையாட்டுக் காட்டியே வெற்றி கொள்ளவும் முடியும். நீ என்னைக் கவனித்துத்தான் பாரேன்! (தூரத்தே

மலைக் குன்றுகளிலிருந்து மெல்லிய ஓசை யோடு ஒரே சீரான அதிர்வை உடைய பறையொலி யொன்று நொடிக்கு 72 முறை துடிக்கும் இதயத் துடிப்புக்குச் சரியாக அதிர்கிறது—தொடர்ந்து இடையீடின்றி ஒரே சீராக வேகம் மிகுதி யாகி, நாடகத்தின் இறுதிவரை ஒலிக் கிறது.)

(ஜோன்ஸ் அவ்வொலியைக் கேட்டு மருள் கிறான். ஒலியை உற்றுக் கேட்கக் கேட்க, இனம் கண்டுகொள்ள இயலாத அச்சம் அவன் முகத்தில் சற்று நேரம் படர்வது தெரிகிறது. பின் தன் இயல் பான பாணிக்கு வர ஒரு முயற்சி செய்து கேட்கிறான்.) எதற்காக அந்த முரசை ஒலிக்கிறார்கள்?

ஸ்மிதர்ஸ் : (ஒரு கீழ்த்தரமான அசட்டுச் சிரிப்புடன்) உங்களுக்காகத்தான். இரத்தக் களரியின் வெறியாட்டச் சடங்கு தொடங்கிவிட்டது என்பது அதன் அர்த்தம். இதற்கு முன்பே இதை நான் கேட்டிருக்கிறேன். எனக்குத் தெரியும் அது என்னவென்று.

ஜோன்ஸ் : சடங்கா? சடங்கென்றால் என்ன?

ஸ்மிதர்ஸ் : அந்தக் கறுப்பர்கள் குருதி வெறியுடைய கூட்டமொன்றை நடத்துகிறார்கள்; போர் நடனம் ஆடுகிறார்கள்; உங்களைப் பின் தொடரத் தொடங்குமுன் போதிய

வீரத்தை வரவழைத்துக் கொள்ள இதனைச் செய்கிறார்கள்.

ஜோன்ஸ் : நடத்தட்டுமே! அவர்களுக்கு நிச்சயம் அது தேவைதான்.

ஸ்மிதர்ஸ் : அங்கே அவர்கள் தங்கள் காட்டு மிராண்டிச் சமய வழிபாட்டினை நடத்து கிறார்கள்; உங்கள் வெள்ளிக்குண்டுக் கெதிராக உதவிபெற எண்ணற்ற ஆவி களை மந்திர வசியம் செய்கிறார்கள். (அவன் இடியோசையெனப் பலமாகச் சிரிக்கிறான்.) ஐயனே, ஆனால் நரகத்தை யொத்த மென்மையும் தணிவுமுடையவர் களன்றோ அவர்கள்!

ஜோன்ஸ் : (தைரியமிருப்பினும் ஒரு சிறிது மலைப் புடன் நடுங்கி) ஹூ! இந்தக் கோழிக் குஞ்சைப் பயமுறுத்த இதெல்லாம் போதாது.

ஸ்மிதர்ஸ் : (ஜோன்ஸின் உணர்ச்சிகளை மோப்பம் பிடித்தவனாய்—குத்தலாக) இன்றிரவு காட்டில் நன்றாக இருள் படர்ந்தவுடன், அவர்கள் தங்களது செல்லப் பிசாசுகளை யும் பூதங்களையும் ஏவி உங்களை வேட்டையாட வருவார்கள். நாளைக் காலைக்குள் உங்கள் மயிர்முழுவதும் குத் திட்டு நிற்கும் பாருங்கள். (கடுமையாக) பட்டப்பகலிலேயே அது பேய் நடமாடும்

பயங்கரக் காடாயிற்றே! அங்கு என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாதே; அந்த அளவுக்குப் பயங்கர மௌனம் நிலவுமே. எந்த நிமிடம் அதனுள் என் காலை எடுத்து வைக்கிறேனோ அந்த நிமிடமே முதுகின் முள்ளந்தண்டெல்லாம் நடுக்கும் குளிர் பரவக் கண்டிருக்கிறேனே.

ஜோன்ஸ் : (உதாசீனமாக மூச்சுவிட்டு) உன்னைப் போன்று பயப்படுவதற்கு நான் ஒன்றும் கோழையல்லேன். மரங்களும் நானும்; நாங்கள் நண்பர்கள். அதோ பார் முழு நிலா! எனக்கு ஒளிவீச வருவதை. அந்த அப்பாவி நீக்ரோக்கள் அவர்கள் நினைக்கும் மூடத்தனமான பில்லி சூனியங்களைச் செய்து பார்க்கட்டும். பாட்டி கதையான பூதங்கள், பேய், பிசாசு போன்றவற்றை நம்புமளவுக்குக் கீழ்த்தரமானவன் என்று என்னை நீ நினைக்கிறாயா? வெள்ளைக்காரா, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ. நீ எதையும் என்னிடம் பேசவேண்டியதில்லை. (ஓர் ஏளனச் சிரிப்புடன்) ஞானஸ்நானம் அளிக்கும் புனிதத் திருச்சபையில் நீண்ட நாளாக உறுப்பினனாயிருக்கும் ஒருவனிடம், அவர்கள் தங்கள் வேலையைக் காட்டுகிறார்கள் என்பது உனக்குத் தெரியாதா? நான் சங்கடத்தில்

மாட்டிக்கொள்ளு முன்பே, புகைவண்டியில் வரும் உயர்ந்தரகப் பயணிகளுக்கு மூட்டை தூக்கும் கூலியாளாக இருந்த காலத்திலேயே, அத் திருச்சபையில் உறுப்பினனாக இருந்தவன். அவர்களது காட்டுமிராண்டிச் சூழ்ச்சிகளை வேண்டியமட்டும் செய்து பார்க்கட்டும். அந்த ஞானஸ்நான புனித தேவாலயம் என்னை நிச்சயம் காப்பாற்றும்; அவர்களை நரகத்தில் தள்ளும். (பின் தன்னம்பிக்கை நிறைந்த திருப்தியுடன்) எனக்குச் சொந்தமான சிறிய வெள்ளிக்குண்டு வேறு என்னிடம் இருக்கிறது என்பதை மறந்துவிடாதே.

**ஸ்மிதர்ஸ் :** ஓ! நீங்கள் இங்கு வந்ததிலிருந்து உங்கள் ஞானஸ்நான சுவிசேச தேவாலயத்தைப்பற்றிக் கவனிக்காமல் போய்விட்டீர்களே. உங்கள் கொள்கைகளை மாற்றிக்கொண்டு, நாசகாலக் கபாலிகர்களுடன் அளவளாவி வந்திருக்கிறீர்கள் என்றன்றோ கேள்விப்படுகிறேன் நான். அந்த நரகத்தைப் பன்றி என்று வேண்டுமென்றாலும் அழையுங்கள்.

**ஜோன்ஸ் :** (ஆவேசத்துடன்) நான் அப்படி நடிக்கிறேன்! நிச்சயமாக அப்படி நடிக்க வேண்டியிருக்கிறது! ஆரம்பமுதலே அது

என் விளையாட்டின் ஒரு பகுதியே யாகும். நீக்ரோக்களாகிய அவர்கள் கறுப்பை வெள்ளை என்கிறார்கள் என்று கண்டுகொண்டால், அவர்கள் ஊளையைக் காட்டிலும் உரக்கக் கத்தி ஊளையிட்டன்றோ ஆமோதிக்கிறேன். ஞானஸ்நான புனித சுவிசேச தேவால யத்திற்குச் சுவிசேசப் பிரசாரப் பணி செய்வதால் எனக்கு என்ன இலாபம். நான் வேண்டுவதெல்லாம் பணம்தான். அதற்காக ஏசுபெருமானைக்கூடத் தற்போதைக்கு அலமாரியில் வைத்துப் பூட்டுகிறேன். (கைக்கடிகாரத்தைப் பார்ப் பதற்காகத் திடீரென்று பேச்சை நிறுத்து கிறான்-சர்வ ஜாக்கிரதையாக) வெட்டிப் பேச்சுப் பேசி உன்னோடு பொழுது போக்க எனக்கு நேரமில்லை. இந்த விநாடியே நான் இங்கிருந்து போகப் போகிறேன். (அரியணையின் கீழே கையைவிட்டுப் பிரகாசமான பல வண்ணப் பட்டைக் கோடுகளை உடைய, பட்டை சுற்றிய விலையுயர்ந்த பனாமாத் தொப்பியை எடுத்து ஒய்யார மாகத் தலையில் வைக்கிறான்) போய் வருகிறேன், வெள்ளையனே! (ஓர் அசட்டுச் சிரிப்புடன்) எப்பொழுதாவது ஒரு சமயம் நீ சிறையில் இருக்கும்போது உன்னைச் சந்திக்கிறேன்.

ஸ்மிதர்ஸ் : என்னையா, நீங்களா! மாட்டீர்கள். நீங்கள் பேயாய் அலைகிறீர்களே பணம் பணம் என்று, அந்தப் பணத்துக்காகக் கூட நீங்கள் இப்போது சிக்கிக்கொண் டிருப்பதுபோல் நான் சிக்கிக்கொள்ள மாட்டேன். ஆனாலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கட்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

ஜோன்ஸ் : (உதாசீனத்துடன்) உன்னைப்போல் ஒரு பயந்தாங்கொள்ளியை நான் பார்த்ததே இல்லை. நான் நியூயார்க் நகரத்தில் இருப்பதைப்போல் இங்கே அத்தனை பத்திரமாக இருக்கிறேன் தெரிந்துகொள். துணிந்து எதையாவது தொடங்க அந்த நீக்ரோக்களுக்கு இப்பொழுதிலிருந்து இரவுவரை ஆகும். அதற்குள் அவர்கள் பின்தொடர்ந்து வந்து பிடிக்க முடியாத படி தொலைதூரம் போய்விடுவேன் நான்.

ஸ்மிதர்ஸ் : (பகைமை எண்ணத்துடன்) வழியில் ஏதாவது பேய்களைச் சந்தித்தால் அவை களுக்கு என் வணக்கங்களைச் சொல் லுங்கள்.

ஜோன்ஸ் : அது பணக்காரப் பூதமாயின், பணம் பறி போகாமல் இருக்கவேண்டுமானால், உன்னை நெருங்கவேண்டா என்று சொல்லிவிடுகிறேன்.

ஸ்மிதர்ஸ் : (தற்பெருமை அடைந்தவனாய்) பொக்கிஷமே! (பின் ஆவலோடு) நீங்கள் மூட்டை முடிச்சு ஒன்றும் எடுத்துச் செல்லவில்லையா?

ஜோன்ஸ் : வேகமாகப் போக விரும்பும்போது கன மில்லாமல் போவதுதான் என் வழக்கம். தகர டப்பாவில் அடைக்கப்பட்ட உணவைக் காட்டின் ஓரத்தில் புதைத்து வைக்கச் செய்திருக்கிறேன். (தற்பெருமை யாக) இப்பொழுது சொல், வருங் காலத்தை எண்ணி என்னுடைய அறிவைப் பயன்படுத்தவில்லையா என்று! (தாராளம் தோன்றும் சைகை செய்து) இந்த அரண்மனையில் விட்டுவைத் திருக்கும் எல்லாவற்றையும் உனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன் போ. அவர்கள் இங்கே வருமுன் இயன்றவரை சுருட்டிக்கொண்டு நீயும் நழுவிவிடு.

ஸ்மிதர்ஸ் : (ஒயிலாக) மிக்க சரி—மிக்க நன்றி. (ஜோன்ஸ் பின்புறக் கதவை நோக்கி நடக்கும்பொழுது—எச்சரிக்கையாக) இங்கே பாருங்கள், நீங்கள் அந்த வழி யாகவா போகப் போகிறீர்கள்?

ஜோன்ஸ் : சாதாரண நீக்ரோவைப் போலப் பின்புறக் கதவு வழியாகக் கோழைத்தனமாகப் பதுங்கிச் செல்வேன் என்றா எண்ணு

கிறாய்? நான் இப்பொழுது மன்னர் மன்னன் இல்லை என்றா சொல்கிறாய்? இந்தப் பேரரசன் ஜோன்ஸ் வந்த வழியே தான் திரும்பவும் செல்வான். அந்தக் கறுப்புச் செத்தைகள் அவனைத் தடுத்து நிறுத்தத் துணியமாட்டா, இப்போதைக்கு இல்லை. (வாயிலண்டைச் சற்றுத் தாமதிக்கிறான்—தூரத்தே இடைவிடாது ஒலிக்கும் முரசொலியைக் கூர்ந்து கவனித்தவாறு) அந்த ஆள் திரட்டும் பறையொலி கேட்கிறதன்றோ, உனக்கு— ஒலி இவ்வளவு தூரம் கேட்கிறதென்றால் அந்த முரசு ரொம்பப் பெரியதாகத்தான் இருக்கவேண்டும்! (பின் ஒரு சிரிப்புடன்) நல்லது, முழுப் பாண்டு வாத்திய மரியாதையோடு என்னை அவர்கள் வழியனுப்பாவிட்டாலும், அதன் ஒரு பகுதியான பறை ஒலியையேனும் பெறு கிறேனே! போய் வருகிறேன் வெள்ளை யனே! (பைகளினுள் கைகளை விட்ட வாறு, செயற்கையான அஜாக்கிரதை யுடன், பாட்டொலியில் சீழ்க்கையடித்த வாறு வாயிலைக் கடந்து இடப்புறமாக வெளியே செல்கிறான்.)

ஸ்மிதர்ஸ் : (இது என்ன புதிரோ என்று எண்ணு கிறவன்போல், நிறைந்த வியப்புடன் அவனையே கவனித்துக்கொண்டு நிற் கிறான்.) ஒப்புராணை, இவன் அதிகத்

துணிச்சல்காரன்தான். (பின் கோபமாக) ஹோ, பாழாய்ப்போன நீக்ரோ, இவனுக் குத் தோரணை ஒரு கேடா. அவர்கள் இவனைப் பிடித்து, இவனுக்கு வேண்டியதை நிச்சயம் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். (எண்ணத்தால் வரும் இந்த இன்பத்திற்குமுன் காரியத்தை எண்ணியவனாய் பணத்தாசையால் சுற்று முற்றும் நோக்கியவாறு) ஒரு பேர்வழி, இந்த அரண்மனையின் எல்லா இடங் களையும் தேடினாலும்கூடக் கொஞ்ச மாகத்தான் காசு கிடைக்கும்; ஏதோ பார்ப்போம். மேலே செல், நில்லாதே இளைஞனே. (வலப்புறமுள்ள வாயிலண்டை செல்லத் தொடங் கவும்...............)

-: திரை விழுகிறது :-

## காட்சி 2

காட்சியமைப்பு

இரவின் தொடக்கம். அந்தச் சமநிலம் முடிந்து பெரிய காடு தொடங்கும் இடம். முன்னிலப் பகுதியில் மணல் நிறைந்துள்ளது. சமதளத்தில் புள்ளி வைத்ததைப் போன்று இங்குமங்குமாக ஒருசில கற்களும், பருவக்காற்றின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தரையை ஒட்டினாற்போல் பட்டுப்போய் வளர்ச்சி தடைப்பட்ட குத்துச்செடிக் கூட்டங்களும் காணப்படுகின்றன. பின்பக்கத்தில் காடு, உலகத்தை இரண்டாகப் பிரிக்கும் இருளில் வளைந்த சுவர்போன்று காணப்படுகிறது. இருளில் பார்த்துக் கண்டு பழக்கப்பட்டிருந்தால் அன்றி அருகிலுள்ள மரங்களின் தனித்தனியான, கறுத்துத் திரண்ட மிகப் பெரிய தூண்களைப் போன்ற அடிமரங்களின் புறத்தோற்றத்தைக் கண்டுபிடிக்க முடியாது. ஓர் ஏற்றத் தாழ்வற்ற சோகத்தொனியுடன் காற்று ஓலமிட்டு இலைகளினூடே சென்று மறைகிறது. எனினும், இத்தொனி காட்டின் இரக்கமற்ற அசையாத் தன்மையின் உணர்வை வலுப்படுத்தி, மாறாத மற்றும் நிலைத்திருக்கும் மௌனத்திற்கு ஓய்வு கொடுக்கும் பின்னணியாக மட்டுமே அமைகிறது.

(வேகமாக நடந்து ஜோன்ஸ் இடப்புறத்தி லிருந்து உள்ளே நுழைகிறான். காட்டின் ஓரத்தை நெருங்கியவுடன் நிற்கிறான். பழக்கப்பட்ட நில எல்லைக்குறி ஒன்றனைத் தேடுவதைப்போன்று இருட்டில் கூர்ந்து கவனித்தவாறு சுற்றுமுற்றும் வேக மாகப் பார்க்கிறான். பின் வெளிப்படையாகத் தான் வந்து சேரவேண்டிய இடத்தில் வந்து சேர்ந்து இருப்பதாகத் திருப்திப்பட்டவனாய் மிகவும் களைத்துப்போன நிலையில் தொப்பெனக் கீழே விழுகிறான்.)

**ஜோன்ஸ் :** நல்லது, நான் வந்து சேர்ந்தாச்சு. சரி யான நேரம்தான். கொஞ்சநேரம் தாமதித்தால்கூட 'இஸ்பேட் ஆஸ்' ஸை விட இந்தப் பக்கமெல்லாம் இருட்டி யல்லவா போயிருக்கும். (அவன் இடுப்புப் பையிலுள்ள ஒரு வண்ணப் புள்ளியிட்ட கைக் குட்டையினை இழுத்து முகத் திலுள்ள வியர்வையைத் துடைக்கிறான்.) அப்பாடா! நிறையக் காற்று வேண்டி யிருக்கிறதே! ரொம்பத் துவண்டல்லவா போய்விட்டேன். மென்மையான அந்தப் பேரரசன் பதவி, கொளுத்தும் வெயிலில் இந்தச் சமவெளியில் நீண்ட தூரம் நடப் பதற்கான பயிற்சியாக எனக்கு அமைய வில்லையே! (பின் ஓர் ஏளனச் சிரிப்பு டன்) உற்சாகமாயிரு, நீக்ரோவே! மோசமான நிலை இனித்தான் வரப் போகிறது. (தலையை உயர்த்திக்

காட்டைப் பார்க்கிறான். அவனது ஏளனச் சிரிப்பு மெள்ளமெள்ள வலுவற்று மறைந்து போய்விடுகிறது. அச்சம் மிகுந்த ஒரு குரலில்) அப்பப்பா, இந்தக் காட்டைத்தான் பாரேன்! அந்த உதவாக் கரைப்பயல் ஸ்மிதர்ஸ் சரியாகத்தான் சொன்னான். இவை கறுப்பாகத்தான் உள்ளன. (அவற்றினின்றும் பார்வையைத் திருப்பி பாதங்களைப் பார்த்தவாறு, காரியத்திலிருந்து கவனத்தைத் திருப்பும் சந்தர்ப்பத்தைச் சட்டெனப் பெற்றவனாக, பரிவுடன்) பாதங்களே, உங்களைப் பொறுத்தவரையில் இதுவரை நன்றாகச் சமாளித்துவிட்டீர்கள். நிச்சயமாகக் கொப்புளம் என்று எதுவும் உங்களுக்கு வரவில்லை என்று நான் நினைக்கிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக்கொள்ள இதுதான் நேரம். (அவன் தன் பூட்ஸ்களைக் கழற்று கிறான். அவனது கண்கள் காட்டைப் பார்க்காமல் வேண்டுமென்றே விலகிக் கொள்கின்றன. தன் குதிகால்களை மெல்ல மெல்லத் தொட்டுப் பார்த்தவனாய்) இன்னும் நன்றாகத்தான் இருக்கிறீர்கள்— ஏதோ சூடேறிவிட்டது போலும் உங்களுக்கு; சூட்டை ஆற்றிக்கொள்ளுங் கள். நீங்கள் வெகு தொலைவு போக வேண்டியிருக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (களைப்படைந்த நிலையில் அமர்கிறான். சீரான பறை

யொலியை உற்றுக் கேட்டவாறு, மனத்தில் எழும் சஞ்சலத்தை மறைக்கப் பயங்கரமாக உறுமுகிறான்.) காட்டு மிராண்டி நீக்ரோப் பயல்கள்! முரசை அடித்துக்கொண்டே இருப்பதால் சலிப்புத் தட்டாதோ அவர்களுக்கு! ஒலி அதிகரிப் பதுபோலத் தோன்றுகிறதே! ஒருகால் என்னைப் பின்தொடர்ந்து வருகிறார் களோ? (தட்டுத் தடுமாறி எழுகிறான், பின்னால் சமநிலத்தைத் திரும்பிப் பார்த்த வாறே) அவர்களை இப்பொழுது காண முடியவில்லை. 100 அடி தூரத்திற்குள் வந்தால்கூடக் காணமுடியாது. (அச்சந் தரும் சிந்தனையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள, நீரில் நனைந்த நாய் தன்னை உலுக்கிக் கொள்வதைப்போல உலுக்கிக் கொள்கிறான்.) நிச்சயமாக அவர்கள் பல மைல்களுக்கு அப்பால்தான் இருக்கவேண்டும். எதற்காக நீ பட படக்கிறாய்? (தெம்பைப் பெற முணு முணுத்தவாறே அவன் கீழே அமர்ந்து அதிவிரைவாக அவனது பூட்ஸுக்கு வாரிழையைப்போடத் தொடங்குகிறான்.) உனக்கு என்ன வந்திருக்கிறது தெரியுமா? உன் வயிறு காலியாக உள்ளது. அதுதான் இப்போதைய உன் காரியம். சாப்பிட நேரம் வந்துவிட்டதே! இரைப்பையில் காற்றைத் தவிர வேறெதுவும் இல்லை யாதலால் உன்னை அது கலக்குகிறது.

நல்லது, காலணிகளின் வாரிழையை மாட்டியபின் நாம் இங்கே சாப்பிடலாமே! (காலணிகளை மாட்டி முடிக்கிறான்.) அதோ! அங்கே பார்க்கலாம். (முழந்தாளிட்டுக் கைகளால் ஊர்ந்தவாறு சுற்றியுள்ள இடங்களை உன்னிப்பாகக் கவனித்து எதையோ தேடுகிறான்.) வெள்ளைக் கல்லே, வெள்ளைக் கல்லே, எங்கே நீ? (முதல் வெள்ளைக் கல்லைப் பார்த்ததும் அதனை நோக்கி ஊர்ந்து செல்கிறான்—திருப்தியோடு) இங்கேயா நீ இருக்கிறாய்! இதுதான் சரியான இடம் என்று எனக்குத் தெரியும். உணவுப் பெட்டியே, என்னிடம் வா. (கல்லைப் புரட்டிவிட்டு அடியில் துழாவிப் பார்த்து —ஏமாற்றமடைந்த தொனியில்) இங்கே இல்லை. போனால் போகிறது. இது சரியான இடந்தானா இல்லையா? அதோ மற்றொரு கல். அதுவாகத்தான் இருக்க வேண்டும். (அவன் ஊர்ந்தே அடுத்த கல்லுக்குச் சென்று அதையும் புரட்டுகிறான்.) இங்குமன்றோ காணவில்லை! உணவே, எங்கே இருக்கிறாய்? இங்கே இல்லை. கஷ்டகாலமே, பட்டினியாகவா இந்தக் காட்டில் நான் செல்லவேண்டும் —இரவு முழுவதும்! (பேசிக்கொண்டே ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு ஊர்ந்து செல்கிறான். கட்டுமீறிய வேகத்தில் கற்களைப் புரட்டுகிறான். இறுதியாக

மனம் பதறியவனாய்த் தாவி எழுந்து நிற்கிறான்.) இடத்தைக் கோட்டை விட்டு விட்டேனா? அப்படித்தான் தெரிகிறது. ஆனால் பட்டப்பகலில், சமவெளியில் வழித்தடத்தைப் பிடித்து வரும் பொழுது அது எப்படி நடந்திருக்கும்? (மிகுந்த சோகத்துடன்) எனக்குப் பசிக்கிறதே! பசிக்கிறதே! எனக்குச் சாப்பாடு இல்லாமல் பசி தீராதே! உணவில்லாமல் எனக்கு எங்கிருந்து பலம் வரும். கஷ்டகாலமே எப்பாடுபட்டாவது அந்த உணவைக் கண்டுபிடித்தே ஆகவேண்டும்! ஏன் இவ்வளவு சீக்கிரமாக இருட்டிவிட்டது? ஒன்றையும் காணமுடியவில்லையே. (ஒரு நெருப்புக் குச்சியைக் கால்சட்டையில் உராய்ந்து சுற்றுமுற்றும் பார்க்கிறான். அதே நேரத்தில் முரசொலி நொடிக்கு நொடி படிப்படியாய்க் கூடிக் கொண்டேபோவது தெளிவாகக் கேட்கிறது. (தடுமாறிய குரலில் அவன் முணுமுணுக்கிறான்.) ஒரே வெள்ளைக் கல் மட்டும்தானே இங்கிருந்ததாக நினைவு. இத்தனை வெள்ளைக் கற்களும் இங்கே எப்படி வந்தன? (சட்டெனப் பயத்தால் மூச்சிரைக்க, எரியும் நெருப்புக் குச்சியைத் தரையில் வீசி எறிந்து அதைக் காலால் மிதிக்கிறான்.) நீக்ரோப் பயலே, புத்தி தடுமாறிப் பைத்தியமாகிவிட்டாயா? நெருப்புக் குச்சியைக் கொளுத்தியா நீ

எங்கே இருக்கிறாய் என்பதைக் காட்டுவது? கடவுள் அருள் புண்ணியமாகப் போகட்டும். புத்திசாலித்தனமாக நடந்து கொள், பின்னே என்ன? நான் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமே. (ரிவால்வரில் கையை வைத்தவாறே பின்னால் உள்ள பரந்த நிலப்பரப்பை அச்சத்துடன் பார்க்கிறான்.) அது சரி, இந்த வெள்ளைக் கற்களெல்லாம் இங்கு எப்படி வந்திருக்க முடியும்? தகர டப்பாவில் அடைத்துத் தார்த் துணியால் சுருட்டிவைத்த உணவு எங்கே போய் விட்டது?

(அவனது முதுகு, காட்டை நோக்கி இருக்கும்பொழுது வடிவமைப்பற்ற சிறிய அச்சங்கள் காட்டின் உட்பகுதியிலிருந்து ஊர்ந்து வெளியே வருகின்றன. இருட்டைவிடக் காடு இருண்டு தெரிகிறது. சூழ உள்ள அவை கறுப்பாய், உருவமற்றவையாய் உள்ளன அவற்றின் ஒளிவிடும் சிறிய கண்கள் மட்டுமே தெரிகின்றன. ஏதாவது விவரிக்கக்கூடிய உருவம் அவற்றிற்கு உண்டென்று சொல்வதானால், ஊர்ந்து செல்லும் பருவத்துக் குழந்தையினிடையளவுள்ள உளுவான் புழுப் போன்றவை. ஆனால், அவை ஓசையின்றிக் கடும் முயற்சியால் நேராக நிமிர்ந்து நிற்க முயன்றும் முடியாமல் மீண்டும் மீண்டும் கீழே குப்புற வீழ்ந்த நிலையில் நகர்கின்றன. ஜோன்ஸ் காட்டை எதிர்நோக்கித் திரும்புகிறான். தான் இருக்கும் இடம் எது என்பதை மரங்களின்

ஒழுங்கை வைத்துக் கண்டுகொள்ளக் கருதி, அவன் மரங்களின் உச்சிகளைப் பார்க்கிறான்.)

இந்த மரங்களை வைத்து ஒன்றும் சொல்ல இயலாது! கஷ்ட காலமே, இங்கேயுள்ள ஒன்றையும் இதற்குமுன் நான் பார்த்ததாகத் தெரியவில்லையே. நான் நிச்சயமாக அந்த இடத்தைக் கோட்டைவிட்டு விட்டேன். (வர இருக்கும் தீமையை முன்னறியும் மனத்துயரோடு) இது விந்தையாகவன்றோ இருக்கிறது! என்ன விந்தையடா இது! விந்தையிலும் விந்தை! (சட்டெனத் தானே வரவழைத்துக் கொண்ட எதிர்ப்புணர்ச்சியுடன் — கோபக் குரலில்) காடே, என்னிடம் ஏமாற்று வேலையா செய்கிறாய்?

(அவன் முன்னே தரையில் கிடக்கும் வடிவமற்ற புழுக்களினின்றும் இலைகள் அசைந்தெழுப்பும் ஒலி போன்ற கேலிச் சிரிப்பு, தணிந்த இளமென் காற்றாக வருகிறது. அந்தப் புழுக்கள் புரண்டு புரண்டு வளைந்து நெளிந்து மேலே எழுந்து அவனை நோக்கி வருகின்றன. ஜோன்ஸ் கீழே பார்க்கிறான். அஞ்சி அலறிக் கைத் துப்பாக்கியை வெளியே இழுத்தவாறு பின்னோக்கித் தாவி, நடுநடுங்கும் குரலில்) என்ன அது? யார் அங்கே? என்ன நீங்கள்? நான் சுடுமுன் ஓடிவிடுங்கள்! இன்னுமா போகவில்லை நீங்கள்? ..............(அவன் சுடுகிறான். கண்ணைப் பறிக்கும் ஒளி, பெரும் ஒலி, அதன் பின் நிலவும் அமைதியை, வெகு தொலைவில் வேகமாக அதிரும் முரசொலி கலைக்கிறது. வடிவமற்ற உருவங்கள் விருட்டென ஓடிக் காட்டினுள் மறைந்துவிடுகின்றன.

ஜோன்ஸ் கூர்ந்து கவனித்த நிலையில் ஆடாமல் அசையாமல் தான் இருந்த இடத்திலேயே இருக்கிறான். குண்டு வெடித்த சத்தமும் கையில் கைத்துப்பாக்கி பிடித்திருப்பதும், நிலைகுலைந்த அவனது மனத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவருகின்றன. அவனுக்கு மீண்டும் தெம்பு உண்டாகிறது. புதுத் தெம்புடன் தனக்குத்தானே பேசிக்கொள்கிறான்.)

அவர்கள் தொலைந்தார்கள். அந்தத் துப்பாக்கிக் குண்டு அவர்களைத் தீர்த்துக் கட்டி விட்டது. அவையெல்லாம் சின்னஞ்சிறியவைதாம். காட்டுப் பன்றிகள் என்றே நினைக்கிறேன். உன்னுடைய உணவுப் பொட்டலத்தை அவைதாம் தோண்டி எடுத்துத் தின்றிருக்க வேண்டும். நிச்சயமாக, முட்டாள் நீக்ரோவே அவை என்ன என்று நினைக்கிறாய்—பேய்கள் என்று. (மனம் பதறி) கஷ்டகாலமே, நீ அந்தக் குண்டை வெடித்த பொழுதே உன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டாய். அந்த நீக்ரோக்கள் இந்த துப்பாக்கி ஒலியைக் கட்டாயம் கேட்டிருப்பார்களே! இனி, நீ இங்குக் காத்திருக்காமல் காட்டினுள் சென்றுவிட இதுதான் நல்ல நேரம். (காட்டை நோக்கிச் செல்லத் தொடங்குகிறான். நுழையுமுன் சிறிது தயங்குகிறான்—துணிவுடன் தன்னையே ஊக்குவித்தவனாய்) உள்ளே போடா, கறுப்பனே! எதற்காகப் பயப்படுகிறாய்? மரங்களைத் தவிர இங்கே வேறொன்றும் இல்லையடா! உள்ளே போ! (அவன் தைரியமாகக் காட்டினுள் நுழைந்துவிடுகிறான்.)

-: திரை விழுகிறது :-

## காட்சி 3

### காட்சியமைப்பு

[ஒன்பது மணி. காட்டினுள் சந்திரன் இப்பொழுது தான் உதித்திருக்கிறான். அவன் ஒளிக்கற்றைகள் இலைகளால் ஆன மேல்விதானத்தினூடே எளிதில் பார்க்க இயலாத நடுக்குறுவிக்கிற மேற்பூச்சாக மங்கிக் காணப்படுகின்றன. தொட்டடுத்த முன்புலமாக அடர்ந்த தாழ்வான சுவர்போன்ற குத்துச்செடிப் புதர்களும் கொடிகளும் காணப்படுகின்றன. மரங்கள் இல்லா ஒரு சிறிய முக்கோண வடிவமான காலி இடத்தைச் சுற்றிலும் அவை வேலியமைத்துள்ளன. அதற்கப்பால் கன்னங்கறேலெனச் செறிவுள்ள காடு அரண்போன்று சூழ்ந்துள்ளது. மங்கலாகத் தெரியும் பாதை ஒன்று மரங்களில்லா அவ் வெளியின் இடப் புறமிருந்து வந்து, பின்புறமாக, மீண்டும் அதிலிருந்து வளைந்து நெளிந்து வலப்புறத்தை நோக்கிப் போவது தெரிகிறது. காட்சி தொடங்கும்போது எதையும் தெளிவாகக் காண முடிவதில்லை, அதிரும் முரசொலியைத் தவிர. அதுவும் முந்தைய காட்சியை விடக் கொள்ளைச் சத்தத்துடனும் விரைவாகவும் கேட்கிறதென்றாலும் அங்கு நிலவும் அமைதி கொஞ்ச நேரத்திற்கு ஒருமுறை கேட்கும் புதிரான 'கிளிக்' ஒலியால் தடுக்கப்படுகிறது. பின் நீக்ரோ உருவம்

ஜெஃப் படிப்படியாகப் பிட்டத்துடன் கூடிய இடுப்பால் முக்கோணத்தின் பின்பகுதியில் பதுங்கு வதைக் காணமுடிகிறது. அவன் நடுத்தர வயதினன்; மெலிந்தவன்; பழுப்பு நிறத்தினன். தூங்கும் வசதி படைத்த உல்லாச இரயில் பெட்டிப் பயணிகளின் சுமை தூக்கும் கூலியாளின் சீருடையும் தொப்பியும் அணிந்துள்ளான். ஓர் இயந்திர மனிதன் இயங்குவது போல இரு பாய்ச்சிகைகளைத் தனக்கு முன்னே தரையில் வீசி எறிந்தும், கையிலெடுத்தும், குலுக்கி மீண்டும் அவற்றைத் தரையில் வீசிக்கொண்டும் இருக்கிறான். இடப்புறப் பாதை வழியாக யாரோ கனமாக அடியெடுத்து வைத்து நடந்துவரும் காலடி ஓசை கேட்கிறது.] (நடுங்கும் தன் குரலைச்சரிசெய்ய எண்ணிச் செயற்கையாகக் குரலை உயர்த்தி, காலடி ஓசையால் எழும் அச்சத்தைப் போக்கி உற்சாகப்படுத்தக் கடுமையாக முயன்ற நிலையில் சந்திரன் உதித்திருக்கிறான்.) நீக்ரோவே, இதைக் கேட்கிறாயா? உனக்கு அதிக வெளிச்சம் இனி இங்கிருந்து கிடைக்கும். உன் முட்டாள் மண்டை இனி அடிமரங்களில் முட்டிக்கொள்ளவும், புதர் களில் உன் கால்களின் தோல் சிராய்ப்புண்டு போகவும் தேவையில்லை. இப்பொழுது நீ எங்கே போய்க்கொண்டிருக்கிறாய் என்பதைப் பார்த்துகொள். எனவே, தெம்பாக இரு! இப்பொழுதிலிருந்து கொஞ்சம் நிதானமாகவே போ. (அவன் முக்கோண வெட்டவெளியின் பின்பக்கமாகச் செல்லக் காலை எடுத்து வைத்தவாறு சட்டைக் கையால் முகத்தின் வியர்வையை ஒற்றியகற்றுகிறான். நேர்த்தியான நெகிழ்வுடைய தனது தொப்பியை அவன் தொலைத்து

விட்டான். முகத்தில் சிராய்ப்புகள் காணப்படு கின்றன. பளபளப்பான அவனது சீருடையில் பெரிய கிழிசல்கள் காணப்படுகின்றன.) இப்பொழுது நேரம் என்ன ஆகிறது, தெரியவில்லையே! அதனைக் காணத் தீக்குச்சியை மட்டும் கொளுத்தமாட்டேன் ............ப்பூ.........உண்மையில் புழுக்கமாகத்தான் இருக்கிறது! (களைத்தவனாய்) எவ்வளவு நேரமாக இக்காட்டில் அலைந்துகொண்டிருக்கிறேன்? மணிக் கணக்கில் ஆகியிருக்கலாம். காலமெல்லாம் அலைந் ததுபோல் இருக்கிறதே. அப்படி இருக்கமுடியாது. மேன்மைதங்கிய தங்களுக்கு இது நீண்டதொரு இரவாக இருக்குமோ! (துயரமான கேலிச் சிரிப்புடன்) மேன்மைதங்கியவராமே! இந்தக் குழந்தையிடம் மேன்மைதங்கிய எதுவும் தற்சமயம் இல்லை. (மகிழ்ச்சியை வரவழைக்க முயன்று) விடு கவலையை. இவையெல்லாம் இந்த வியாபாரத்தில் ஒரு பகுதி தானே! மற்ற எல்லாவற்றையும் போலவே இந்த இரவும் ஒரு முடிவுக்கு வந்துவிடும். அங்கே பத்திர மாகப் போய்ச் சேர்ந்தபின், பணம் கைக்குக் கிடைத்து விட்டபின் இவற்றையெல்லாம் எண்ணிச் சிரிப்பாய். (சீழ்க்கையடிக்கத் தொடங்கி ஆனால் சட்டெனத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவனாய்) எதற்காகச் சீழ்க்கையடிக்கிறாய் முட்டாளே! உலகத்தி லுள்ள எல்லோரும் உன் சீழ்க்கையொலியைக் கேட்க வேண்டுமா, என்ன? (உற்றுக் கவனிக்க, பேச்சை அவன் நிறுத்துகிறான்.) அந்தப் பழைய முரசொலியே தான்! சப்தத்திலிருந்து நெருங்கி வருகிறதென்பது நிச்சயமாகிறது. அவர்கள் முரசையும் தங்களோடு கட்டி எடுத்து வருகிறார்கள். கிளம்புவதற்கு நேரம்

வந்தாச்சு. (ஓரடி முன்னுக்கு எடுத்து வைக்கிறான், பின் வியாகூலமடைந்தவனாய் நிற்கிறான்.) நான் கேட்கும் விந்தையான அந்த 'கிளிக்கு கிளிக்கு' என்ற மற்றோர் ஒலி என்னவாயிருக்கும்? அதோ, அங்கே கேட்கிறது! அருகிலிருந்து கேட்கிறதே! என்னவோ ஒலிபோன்று—ஒலிபோல—கடவுள்மேல் ஆணையாக! யாரோ நீக்ரோ பகடையல்லவா வீசுகிறான்! (அஞ்சிய வனாய்) அந்த வீச்சை விரைவில் நான் முறியடித்தாக வேண்டும். (காலித் திடலில் வேகமாக நடந்து செல் கிறான்—பின் ஜெஃபைப் பார்த்தவுடன் விறைத்து நிற்கிறான்—பயத்தால் மூச்சுத் திணற) யார் அங்கே? யார் அது? ஜெஃப், நீயா அது? (அவனை நோக்கி நகர்ந்தவாறு, தான் இருக்கும் சூழ்நிலையைச் சற்று மறந்தவனாய், உண்மையில் தான் பார்ப்பது உயிருள்ள ஒரு மனிதன் என்ற நம்பிக்கை விட்டாற்றிய குரலில்) ஜெஃப்! உன்னைப் பார்த்ததில் ரொம்ப மகிழ்ச்சி! சவரக் கத்தியால் உன்னை நான் பலமாக வெட்டியதால் நீ இறந்துவிட்டாய் என்றன்றோ சொன்னார்கள். (திடீரெனப் பேச்சை நிறுத்திக் குழம்பிய நிலையில்) நீக்ரோப் பயலே, நீ எப்படியடா இங்கே வந்தாய்? (ஜெஃப் இயந்திரம் போலப் பகடைக்காயைத் தொடர்ந்து வீசி விளையாடு வதைக் கண்ணிமைக்காது பார்க்கிறான். ஜோன்ஸின் கண்கள் காட்டுத்தனமாகச் சுழலத் தொடங்கு கின்றன. வாய்குழறி) போகமாட்டாய் — என்னைப் பார்—என்னோடு பேசமாட்டாயா நீ? நீ—நீ—ஒரு பேயா? (அச்சம் மற்றும் கோபத்தில் விளைந்த வெறியில் விருட்டெனச் சுழல் துப்பாக்கியைக் கையில் எடுக்கிறான்.) நீக்ரோவே, ஒருமுறை நான் உன்னைக்

கொன்றிருக்கிறேன். மறுபடியும் உன்னை நான் கொன்றாக வேண்டுமா? அப்படியானால் இந்தா வாங்கிக்கொள். (அவன் சுடுகிறான். புகை மறையும் பொழுது ஜெஃபும் மறைந்துவிடுகிறான். ஜோன்ஸ் நடுங்கிக்கொண்டு நிற்கிறான்—பின் ஒருவித மனவுறுதி யுடன்) எப்படியானால் என்ன? தொலைந்தான் அவன். பிசாசோ, பிசாசு இல்லையோ, இந்தக் குண்டு அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டது. (தூரத்தே முழங்கும் முரசொலி தெளிவாக மேலும் துரித கதியில் ஒலிக்கிறது. ஜோன்ஸ் அதை மனத்தில் கொள் கிறான்—அதிர்ச்சியுடன் தோள்புறமாகத் திரும்பி, பின் நோக்கிப் பார்த்துக்கொண்டே) அவர்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறார்களே! நான் இங்கே துப்பாக்கியை வெடித்து நான் இருக்கும் இடத்தை அவர்களுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறேனே! ஓ, கஷ்டகாலமே! நான் ஓடத்தான் வேண்டும் போலிருக்கிறதே. (பாதையை மறந்து, பின்பகுதியிலுள்ள குத்துச்செடிப் புதரினுள் கண்மண் தெரியாமல் தாவி நிழலில் மறைந்துவிடுகிறான்.)

-: திரை விழுகிறது :-

## காட்சி 4

**காட்சியமைப்பு**

[பதினொரு மணி. அதே காட்டில் அகலமான புழுதி நிறைந்த சாலை ஒன்று குறுக்குவிட்டமாகக் காட்டின் வலமுன்புலத்திலிருந்து இடப்பின்புலத்துக்கு ஓடுகிறது. இருபுறமும் வானளாவ வளர்ந்துள்ள காடுகள் அச் சாலைக்குச் சுவராக அமைந்துள்ளன. சந்திரன் இப்பொழுது வானில் உயர்ந்துள்ளான். அவன் ஒளியில் சாலை கோரமான மாயத் தோற்றம் தருகிறது. அக் காடு ஒரு கணம் விலகி நின்று, சாலையைத் தன்னோடு செல்ல விட்டுவிட்டுப் பின் தனது அந்தரங்க நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதைப் போன்றுள்ளது. அது நிறைவேறியதும், காடு தன்போக்கில் மீண்டும் மூடிக்கொள்ளும்; பிறகு சாலை இருக்காது. ஜோன்ஸ் காட்டினுள் இருந்து வலப்புறமாகத் தடுக்கியவாறு முன்வருகிறான். அவனது சீருடை கந்தலாயும் கிழிந்தும் உள்ளது. உணர்வு மழுங்கிய சிந்தையோடு தன்னைச் சுற்றிலும் பார்க்கிறான். பின், சாலையைப் பார்க்கும்பொழுது அவனது கண்கள் பிரகாசமான சந்திர ஒளியில் அகல விரிகின்றன. களைத்துப்போய்த் தொப்பென்று விழுகிறான். சிறிது நேரம் பலமாக மூச்சிரைக்கிறது. பின், சட்டெனக் கோபமுற்றவனாய்] வெப்பத்தால்

உருகிக் கொண்டிருக்கிறேன். ஓடி, ஓடி, ஓடி! பாழாய்ப்போகிற இந்த மேல்சட்டை ஒருபக்கம்! இறுக்கமான ஒரு ரவிக்கையைப்போல! (மேல் சட்டையைக் கிழித்தெடுத்துத் தூர விட்டெறி கிறான். இடுப்புவரை உடையில்லாமல் காட்சியளிக் கிறான்.) அப்பாடா, இப்பொழுது சற்றுத் தேவலை! இப்பொழுது என்னால் மூச்சுவிட முடிகிறது! (கீழே பாதங்களைப் பார்க்கிறான். குதிமுள் அவனது கவனத் தைக் கவர்கிறது.) நாசமாகப்போக இந்த நீளப்பல் குதிமுட்கள். இவையல்லவா என்னைத் தடுக்கிவிழச் செய்து கழுத்தைத் திருகுகின்றன. (அவன் அவற்றை வாரோடு கழற்றி வெறுப்புடன் தூர விட்டெறிகிறான்.) தொலை அப்படி! இந்தப் பேரரசன் வேஷத்துப் பகட்டு அணிமணியெல்லாம் இதோ நீக்கிவிட்டேன். நான் இனிப் பாரமில்லாமல் பயணம் செய்வேன்! கடவுளே! நான் களைத்தல்லவா இருக்கிறேன். (கொஞ்ச நேரம் கழித்துத் தூரத்தே முழங்கும் இடை விடாத முரசொலியை உற்றுக் கவனித்தவாறே) நான் ஓடிவந்ததால் எனக்கும் அவர்களுக்கும் இடையில் அதிக தூரம் ஏற்பட்டுவிட்டதோ! அப்படியும் அந்தப் பாழாய்ப்போன முரசு முன்போலவே அருகில் முழங்கு கிறதே—இல்லை, மேலும் அருகிலன்றோ கேட்கிறது. பரவாயில்லை. எப்படியோ நான் முந்திக்கொண்டு விட்டேன் என்று நினைக்கிறேன். என்னை அவர்கள் ஒருபோதும் நெருங்கிவிடமாட்டார்கள். (ஒரு பெரு மூச்சுடன்) என்னுடைய முட்டாள் கால்கள் மட்டும் நிற்கும் திராணியைப் பெற்றிருந்தால்... ஓ, வருத் தப்படுகிறேன். நான் இந்த அளவுக்கு வந்திருக்க வேண்டா. இந்த மன்னர் மன்னன் வேலையை

அவ்வளவு எளிதில் விட்டுவிட முடிகிறதா என்ன ? (சந்தேகத்தோடு தன்னைச் சுற்றிலும் பார்க்கிறான்.) இந்தச் சாலை இங்கே எப்படி வந்தது? நல்ல சமதளச் சாலையும்கூட. இதற்குமுன் இதை நான் பார்த்ததாக ஞாபகமில்லையே. (அஞ்சித் தலையை அசைத்தவாறு) இந்தக் காட்டில் இரவில் நிச்சய மாகப் பேயுலக விசித்திரங்கள் நிறையத்தான் இருக் கின்றன. (ஒரு திடீர் நடுக்கத்துடன்) அவை என்னை வெருட்டுகின்றனவே. ஆண்டவனே, கடவுளே ! அந்தப் பேய் பிசாசுகளை நான் பார்க்காமல் இருக்கச் செய்வீராக! அவை என்னை மிகத் தொல்லை செய் கின்றனவே! (பின், தன்னம்பிக்கை கைவரப் பெற்ற வனாய்ப் பேச முயன்று) பேய் பிசாசுகள் ! ஏய் முட்டாள் நீக்ரோவே, அப்படியொன்றும் இல்லை யடா! பல தடவை அத் திருச்சபைப் போதகர் இதை உனக்குச் சொல்லவில்லையா? நீ என்ன நாகரிகமற்ற வனா, இல்லை இங்குள்ள கறுப்பு நீக்ரோக்களைப் போன்ற முட்டாளா? நிச்சயமாக! இவையெல்லாம் உன் மூளையிலுள்ளவை. அங்கே அப்படியொன்றும் இல்லையப்பா. ஜெஃப் என்று ஒருவன் இல்லவே இல்லை! தெரிகிறதா? அவற்றையெல்லாம் நீ பார்க் கிறாய். ஏனென்றால், உன் வயிறு காலியாக உள்ளது. எல்லாம் உன்னுள் உள்ள பசி நோவுதான். பசி கண் களையும் கருத்தையும் குழப்பிவிடும். எந்த முட்டா ளுக்கும் இது தெரியும். (பின் தணியாப் பற்றுடன் வாதாடியவனாய்) ஆனால் என்னை ஆசீர்வதியும் கடவுளே! அவற்றை நான் ஒருபோதும் சந்திக்காமற் செய்யும். அவை என்னவாக இருந்தாலும் சரி! (பின் சர்வ ஜாக்கிரதையாக) ஓய்வெடுத்துக் கொள்

வேன்! பேசாதே! ஓய்வு! உனக்கு அது தேவை. பின் மீண்டும் உன் வழியைக் பார்க்கலாம். (வான்மதியைப் பார்த்தவாறு) அநேகமாகப் பாதி இரவு கழிந்து விட்டது. விடியும்போது கடற்கரையை அடைந்து விடுகிறாய்! பின் நீ பத்திரமாயிருப்பாய்.

(வலமுன்புறத்திலிருந்து ஒரு சிறு நீக்ரோக் கூட்டம் உள்ளே நுழைகிறது. அவர்கள் கைதிகள் அணியும் வரியாய்க்கோடிட்ட கால்சட்டையை அணிந்துள்ளனர். தலைகள் மொட்டை அடிக்கப் பட்டுள்ளன. கனமான குண்டு இணைத்த சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளதால் ஒரு காலை இழுத்து நொண்டி நடக்கின்றனர். சிலர் குந்தாலி எடுத்து வருகின்றனர். மற்றவர்கள் மண்வாரிகள் கொண்டு வருகின்றனர். சிறைக்காவலன், சீருடையில் உள்ள வெள்ளைக்காரன் ஒருவன், அவர்கள் பின்னால் வருகிறான். அவன் தோள்மீது வின்செஸ்டர் துப்பாக்கி ஒன்று தொங்குகிறது. கையில் கனமான சவுக்கு ஒன்றனை வைத்துள்ளான். காவலன் சமிக்ஞை செய்ததும், ஜோன்ஸ் அமர்ந்திருக்கும் இடத்திற்கு நேர் எதிர்ப்புறத்தில் சாலையில் அவர்கள் நிற்கின்றனர். சந்தடியின்றி நெருங்கிவரும் அவர்களைக் கவனியாது, வானை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த ஜோன்ஸ், சட்டெனக் கீழ்நோக்கிப் பார்க்கவும், அவர்களைக் கண்டுவிடுகிறான். அவனது விழிகள் பிதுங்குகின்றன; எழுந்து நின்று ஓடமுயல்கிறான் பயத்தால் உணர்வு மழுங்கி, நகரமுடியாமல் பின்நோக்கி விழுகிறான். குரல் தடுமாற, மூச்சுத் திணறப், பிரார்த்திக்கிறான்.)

'ஏசு பெருமானே !'

(சிறைக்காவலன் ஒலியெழாவண்ணம் சவுக்கினைச் சொடுக்குகிறான். அந்தச் சமிக்ஞையால் சாலையில் எல்லாக் கைதிகளும் வேலையைத் தொடங்குகின்றனர். அவர்கள் தங்கள் குந்தாலியை வீச்சோடு ஓங்கிப் போடுகிறார்கள்; மண்ணை வாருகிறார்கள். ஆனால், அவர்கள் வேலையிலிருந்து ஒரு சிறு ஒலிகூட எழவில்லை. அவர்கள் முந்தைய காட்சியில் ஜெஃபைப்போன்று ஒரு தானியங்கி இயந்திரம்போல் விறைத்தாற்போன்று மெல்ல இயங்குகின்றனர். சிறைக்காவலன் ஜோன்ஸின் பக்கம் சவுக்கைக் கடுமையாக நீட்டி, அவன் நகர்ந்து மற்ற மண்வாரிகளுடன் தன் இடத்தைப் பிடித்துக்கொள்ளும்படி சமிக்ஞை செய்கிறான். வசிய மந்திரத்தில் கட்டுண்டு உன்மத்தனாகியதுபோல் ஜோன்ஸ் எழுந்து நிற்கிறான். அடிமையைப்போல் தெளிவின்றி முணுமுணுக்கிறான்.)

சரி, ஐயா ! சரி, ஐயா ! வந்துட்டேனுங்க.

(கோபத்தாலும் வெறுப்பாலும் ஒலியில்லாச் சொல்லால் அவனைச் சபித்தவாறு, ஒரு காலை இழுத்தவாறு, அவன் தனது இடத்திற்குச் செல்கிறான்.)

கடவுள் உன்னை நரகத்தில் தள்ளட்டும். என்றைக்காவது ஒரு நாள் உன்னைப் பழிவாங்குகிறேன், பார்.

(தனது கைகளில் மண்வெட்டி இருப்பதுபோல இயந்திர அசைவோடும் களைப்புத் தோன்றும்படியும் புழுதியைத் தோண்டி அள்ளிச் சாலை ஓரங்களில் வீசுகிறான். திடீரெனக் காவலன் கோபத்துடனும் பய முறுத்தும் அதட்டலுடனும் அவனை நெருங்குகிறான். சவுக்கினை உயர்த்திக் கடுமையாக அவன் தோள் பட்டைகளில் விளாசுகிறான். ஜோன்ஸ் வலியால் துடிக்கிறான். அடிமையைப்போன்று கூனிக் குறுகிப் போகிறான். காவலன் வெறுப்புடன் திரும்பி அப்பால் செல்கிறான். நொடிப்பொழுதில் ஜோன்ஸ் நிமிர்ந்து நிற்கிறான். கையில் இருக்கும் மண்வாரியைக் 'கதை' போலத் தூக்கிப் பிடித்தவாறு, சந்தேகப்படாத அக் காவலன்மேல் கொலைப் பாய்ச்சல் பாய்கிறான். வெள்ளைக்காரன் மண்டையில் மண்வாரியை இடி முழக்கத்துடன் செலுத்தும் செயலில், திடீரெனச் ஜோன்ஸுக்குத் தன் கைகள் காலியாக இருப்பது தெரிகிறது. மனம் முறிவுற்று உரக்கக் கத்துகிறான்.)

என் மண்வெட்டி எங்கே? என்னுடைய மண் வாரியைத் தா. இந்த நாசமாய்ப் போவானின் தலையை நான் பிளக்கட்டும். (அவனது சக கைதி களிடம் முறையிட்டவாறு) யாராவது ஒரு மண் வாரி கொடுங்களேன், கடவுள்மேல் ஆணை!

(அவர்கள், கண்கள் தரையை நோக்கியவாறு, ஆடாது அசையாது நிற்கின்றனர். தாக்குதலை எதிர்பார்த்தவன்போல், காவலன் தாக்குபவனுக்கு முதுகைக் காட்டியவாறு காத்திருப்பதுபோலத் தோன்றுகிறது. ஜோன்ஸ் கோபத்தால் குழம்பி வெறி

பிடித்த நிலையில் கைத் துப்பாக்கியைப் பற்றி இழுத்துக்கொண்டே அலறுகிறான்.)

நான் உன்னைக் கொல்கிறேன். ஏ! வெள்ளைப் பிசாசே. நான் செய்யும் இறுதிக் காரியமாக அது இருக்கட்டும்! பேயோ இல்லை பிசாசோ; நான் உன்னை மீண்டும் கொல்கிறேன், பார்!

(கைத் துப்பாக்கியை விடுவித்துக் காவலன் முதுகை நோக்கிக் குறி வைக்காமலே அவன் சுடுகிறான். அதே நேரத்தில் சுவர்போன்ற காடு இரு பக்கங்களிலிருந்தும், நகர்ந்து ஒன்றாக இணைந்து விடுகிறது. சாலையும் குற்றவாளிக் கூட்டத்தின் உருவங்களும் மூடிக்கொண்டிருக்கும் இருளில் மறைக்கப்பட்டுவிடுகின்றன. ஜோன்ஸ் வெறி பிடித்துத் துள்ளி ஓடும்போது குத்துச் செடிப்புதர்கள் ஒடியும் ஒலியும், இன்னமும் வெகு தொலைவில் ஒலி மிகுந்தும், அதிதுரிதமாயும் முரசு துடிக்கும் ஒலிகளும் மட்டுமே அங்குக் கேட்கின்றன.)

-: திரை விழுகிறது :-

## காட்சி 5

### காட்சியமைப்பு

[ஒரு மணி. ஒரு பெரிய வட்டவடிவ வெற்றிடம். உயரம் கண்ணுக்கெட்டாத அளவு நெடிதுயர்ந்த மரங்களின் கனத்த கிளைகள் ரம்பப் பல்போலச் சீராகச் சூழ்ந்து அமைந்த காடு. அதன் நடுவில் விநோதமான, காலப்போக்கால் தேய்ந்து காய்ந்த பெரிய அடிமரம் ஒன்று, ஏதோ ஓர் ஏலக்காரன் மேடை போல் தோன்றும்படியாக அமைந்துள்ளது. மதியின் ஒளி அவ் வெட்டவெளியில், ஒளி வெள்ளம் பாய்ச்சு கிறது. ஜோன்ஸ் காட்டின் இடப்பக்கத்தினுள் இருந்து, காட்டினூடே கஷ்டப்பட்டு வழிவிலக்கிக் கொண்டு உள்ளே வருகிறான். அவன் வேட்டை யாடப்பட்டவனைப் போன்ற அச்சப் பார்வையுடன் மருண்டு, வெட்டவெளியைச் சுற்றுமுற்றும் பார்க் கிறான். அவன் கால்சட்டை கிழிந்து பீற்றலாகிப் போயுள்ளது. காலணிகள் கிழிந்து உருவம் கோணி நடக்கும்போது, மேலும் கீழும் அசைந்து ஓசை எழுப்புகின்றன. அவன் நடுவிலுள்ள மர அடித் தூறுக்கு எச்சரிக்கையோடு ஒளிந்து நடைபோடு கிறான். திடீர்ச் சண்டைக்குத் தயாரானவன்போல் விறைப்பான நிலையில் கீழே அமர்கிறான். பின், தலையைக் கைகளால் தாங்கியவாறு முன்னும்

பின்னும் அசைந்து தனக்குத் தானே பரிதாபமாக முனகுகிறான்.]

ஓ கடவுளே, கடவுளே! ஓ கடவுளே, கடவுளே! (சட்டென முழங்காலிட்டு, கைகூப்பி வானத்தைப் பார்த்து உயர்த்தி—வேதனையுடன் முறையிட்ட வாறு)

ஏசு பெருமானே, என் பிரார்த்தனையைக் கேளும்! நான் ஓர் ஏழைப் பாவி, ஓர் எளிய பாவி அய்யா! நான் பிழை செய்திருக்கிறேன். நான் அதை உணர் கிறேன். எனக்கு அது தெரியும்! ஜெஃப் பகடைக்காய் வீசி மாறாட்டம்செய்து என்னை ஏமாற்றியபொழுது, அளவுக்கு மீறிய கோபத்தினால் அவனைக் கொன்று விட்டேன். ஆண்டவனே, நான் செய்தது தவறுதான். சிறைக்காவலன் என்னைச் சவுக்கால் அடித்தபோது, என்னையும் மீறிய கோபத்தால் அவனை நன்றாக அடித்தேன். பெருமானே, நான் செய்தது தவறுதான். இங்கே இந்த முட்டாள் புதர் நீக்ரோக்கள், சக்தி வாய்ந்த பதவிக்கு என்னை உயர்த்தினார்கள். அகப் பட்டவரையில் சுருட்டிக்கொண்டேன். கடவுளே, நான் செய்தது தவறுதான்! எனக்கே அது தெரியும்! நான் வருந்துகிறேன். என்னை மன்னித்துவிடும்,பிரபு இந்த ஏழைப் பாவியை மன்னித்துவிடும். (பின் அஞ்சிய கெஞ்சலுடன்) பிரபு! அவர்கள் வராமல் பார்த்துக் கொள்ளுமையா! பெருமானே, அவர்கள் என்னை நெருங்காமல் செய்யும்! அந்த முரசொலி என் காது களில் ஒலிப்பதை நிறுத்தும்! அது பேயொலியாக அன்றோ படுகிறது. (இந்தப் பிரார்த்தனையால்

வெளிப்படையாகக் கொஞ்சம் மனத்தெம்பு வந்த வனாய் எழுந்து நிற்கிறான் — முயற்சியில் நம்பிக்கை யுடன்) இதற்கப்புறமாவது இந்தப் பேய்க் காட்சிகளி லிருந்து ஆண்டவன் என்னைக் காப்பாற்றுவார். (மீண்டும் மரக்கட்டையின்மேல் உட்காருகிறான்.) நிஜமனிதர்களைக் கண்டு நான் பயப்படுபவன் இல்லை; வேண்டுமானால் அவர்கள் வரட்டும். ஆனால், அந்த மற்றச் சங்கதி இருக்கிறதே...... (அவன் நடுக்கத்தோடு துணுக்குறுகிறான் – பின், கீழே தனது பாதத்தைப் பார்க்கிறான், பூட்ஸுக்குள் விரல்களால் தடவிப் பார்த்தவாறு — ஒரு வேதனைக் குரலுடன்) ஐயோ, பாவம்! என்னுடைய விரல்களே! இந்த பூட்ஸுகள் பயனற்றவை. துன்பம் கொடுப் பதைத் தவிர வேறு எந்தப் பயனும் இவற்றால் உங்க ளுக்கு இல்லை. இவை இல்லாமலேயே நான் ஈடு கொடுப்பேன். (அவற்றின் கயிறுகளை அகற்றி வெளியே இழுக்கிறான். சீர்குலைந்த பூட்ஸுகளைக் கையில்பிடித்து, வருத்தத்தோடு உற்றுநோக்கியவாறு) நீங்கள் தாம் நிஜம், தரம் மிகுந்த உயர்ந்தரகத் தோலும்கூட. இப்பொழுது உங்களைப் பாருங்கள். மன்னர்மன்னு, நீ மிகவும் இழிந்த நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறாய்!

(தோல்களைத் தாழ்த்தி வாட்டமுற்றவனாய்க் கையிலுள்ள தனது புதை மிதியடிகளைப் பார்த்த வாறு, அவன் அவற்றை எறிந்துவிட மனமில்லா தவனைப்போல் பெருமூச்சு விடுகிறான். அவன் இவ்வாறு கவனத்தில் ஆழ்ந்திருக்கும்போது அவ்

வெட்டவெளியின் எல்லாப் புறங்களிலிருந்தும் அமைதியான உருவங்களடங்கிய ஒரு கூட்டம் உள்ளே வருகிறது. அவர்களெல்லாம் கடந்த நூற்றாண்டின் மத்தியில் தென்அமெரிக்கர்கள் அணிந்த உடையை அணிந்துள்ளனர். அவர்களில் நடுத்தர வயதுடையவர்கள் சிலர் செல்வப் பண்ணை யார்கள் என்பது ஐயமறத் தெரிகிறது. அங்கே நாகரிகப் பாங்கான தோற்றமுடைய ஒருவர் அதிகார தோரணையுடையவராய் ஏலக்காரரைப் போன்று காண்கிறார். என்ன நடக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் உள்ள பார்வையாளர் கூட்டம் ஒன்று அங்கே காணப்படுகிறது. பொழுதுபோக்கிற்காக அடிமைச் சந்தையைப் பார்க்க வரும் பகட்டு இளைஞர்களும் மங்கையரும் அதில் உள்ளனர். அவர்கள் பேசாமலேயே இனிய வரவேற்பைப் பரிமாறிக்கொள்கின்றனர். குரல் எழாமலே ஒருவரோ டொருவர் பேசியும் கொள்கின்றனர். அவர்களுடைய இயக்கங்கள் விறைப்பான சூத்திரப்பாவை போன்ற மாய உலக இயக்கமாகக் காணப்படுகின்றன. அவர்கள் தாங்களாகவே மர அடித்தூறைச் சுற்றிலும் ஆங்காங்கே கூட்டமாக நின்றுகொள்கின்றனர். இறுதியாக ஒரு வேலைக்காரன், இடப்புறத்திலிருந்து ஒரு சிறு கும்பல் அடிமைகளை உள்ளே இட்டு வருகின்றான். வெவ்வேறு வயதுடைய மூன்று ஆடவர், இரண்டு பெண்டிர்; அவருள் ஒருத்தி கைக்குழந்தைக்காரி, குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டும் இருக்கிறாள். அவர்கள் ஜோன்ஸுக்கு அருகில் மரத்துக்கு இடப்புறமாக நிறுத்திவைக்கப்படு கின்றனர்.

அந்த வெள்ளைக்காரப் பண்ணையார்கள் அவர்களை ஆடுமாடுகளைப் பார்ப்பதைப்போன்று பார்த்து மதிப்பிடுகின்றனர். பகட்டு இளவட்டங்கள் அவர்களை நோக்கி விரல்களை நீட்டியவாறு கேலி வார்த்தைகள் பேசுகின்றனர். நங்கையர்கள் மாயத்தால் மயக்குபவர்களைப்போல ஒலி எழாமல் சிரித்துக் கொள்கின்றனர். இவையெல்லாம், அபசகுனமான முரசின் துடிப்பைத் தவிர நிசப்தமான நிலையில் நடக்கிறது. ஏலக்காரன் மரத்தூறுக்கு அருகே தனக்குரிய இடத்தைப் பிடித்துக்கொண்டு கையை உயர்த்துகிறான். கூட்டம் முண்டியடித்துக்கொண்டு அவனை நெருங்குகின்றது. மரக்கட்டையின்மீது ஏறி நிற்கச் சொல்லி, மறுத்தற்சிடமில்லாத கட்டளையாக ஜோன்ஸின் தோள்களை ஏலக்காரன் தொட்டு சமிக்ஞை செய்கிறான்.

ஜோன்ஸ் நிமிர்ந்து பார்க்கிறான்; சூழ நிற்கும் உருவங்களைப் பார்க்கிறான்; அச்சமடைந்தவனாய் ஏதாவது தப்பித்துக்கொள்ள இடமிருக்கிறதா என்று பார்க்கிறான். ஒன்றும் இல்லை என்று கண்டவுடன், கூடியவரை அவர்களைவிட்டு விலகிச் சென்றால் போதும் என்றாற்போல் உரக்கக் கத்தியவாறு வெறிபிடித்தவனாய் மரக்கட்டையின் உச்சியில் குதித்து ஏறுகிறான். கூனிக் குறுகிப் பயத்தால் செயலற்றுப் போனவனாய் அதில் நிற்கிறான். ஏலக்காரன் அமைதியான தனது பேச்சைத் தொடங்குகிறான். அவன் ஜோன்ஸைச் சுட்டிக் காட்டியவாறு, பண்ணையார்கள் அவனை நன்றாகப் பார்த்துக்கொள்ள

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறான். வயலில் மூச்சுக் கட்டிப்பிடித்து வேலை செய்ய இதோ வலுவான கைகளோடு உடல் வலிமையுள்ள ஆள் இருக்கிறான். நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். நடுத்தர வயதுடையவனாயினும் இன்னும் திடமான உடற்கட்டு. முதுகைப் பாருங்கள், தோளைப் பாருங்கள், முன்கைத் தசையைப் பாருங்கள், உருண்டு திரண்ட கால்களைப் பாருங்கள். எந்தக் கடினமான வேலையையும் செய்யக்கூடியவன். மேலும், நல்ல ஒரு மனோபாவம், புத்திசாலி, இசைந்துபோகக் கூடியவன். எந்தப் பெருமகனாவது ஏலத்தைத் தொடங்குகிறீர்களா? பண்ணையாள்கள் விரல்களை உயர்த்திக் காட்டுகிறார்கள்; ஏலம் கேட்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஜோன்ஸைத் தங்களுக்கு வைத்துக்கொள்ள ஆவலாயுள்ளனர் என்பது வெளிப் படையாகத் தெரிகிறது. ஏலம் செவ்வனே நடக்கிறது. கூட்டம் ஈடுபாடு கொள்கிறது. இது இவ்வாறு நடந்து கொண்டிருக்கும்பொழுது ஜோன்ஸ் நம்பிக்கை இழந்த வனாய் அசட்டுத் தைரியத்தால் பீடிக்கப்படுகிறான். அவன் கீழேயோ, சுற்றுமுற்றுமோ பார்க்க அஞ்சு கிறான். முகத்தில் ஆதரவற்றவனுக்கு இயல்பான பயம் விலகி, குழப்பம் அதன் இடத்தைப் பிடித்துக் கொள்கிறது — மெள்ளமெள்ளத் தன்னுணர்வடை கிறான்—திக்கியவாறு)

வெள்ளையர்களே, என்ன செய்து கொண்டிருக் கிறீர்கள்? இவையெல்லாம் என்ன? என்னை எதற் காகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? எப்படி இருப் பினும், என்னை என்ன செய்யப்போகிறீர்கள்?

(வெறுப்பு கொழுந்து விட்டெரிவதால் வந்த பயத்தாலும், வலிப்பு வந்தாற்போலும் நடுங்கியவனாய் சட்டென) இது ஓர் ஏலமா? யுத்தத்திற்குமுன் அவர்கள் செய்ததைப்போன்று நீ என்னை விற்றுக் கொ ண் டா இருக்கிறாய்? (ஏலக்காரன் ஏலம் திகைந்தது என்று கூறி அவனை ஒப்புக் கொடுக்கப் போகும்பொழுது கைத் துப்பாக்கியை உறையிலிருந்து சுண்டி எடுத்தவாறு — அவனிடமிருந்து தன்னை வாங்குபவனையும் ஏலக்காரனையும் மாறி மாறிப் பார்த்துத் தீ எழ விழித்துக்கொண்டே) நீ என்னை விற்கிறாய். நீ என்னை வாங்குகிறாய். நான் சுதந்தர நீக்ரோ என்பதைக் காட்டுகிறேன். உங்கள் ஆத்மா நாசமாய்ப் போகட்டும்! (ஏலக்காரனை நோக்கியும் பண்ணையாரை நோக்கியும் அதிவேகமாகச் சுடும் பொழுது, இரு குண்டுகள் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் வெளியேறி விடுகின்றன. இந்தச் சமிக்ஞைக்காகவே காத்துக் கொண்டிருந்ததைப்போன்று, சுவர் போன்ற காடு மூடிக்கொள்கிறது. இருள் மட்டுமே மிஞ்சுகிறது. பயத்தால் உரக்கக் கத்தியோடும் ஜோன்ஸின் கத்தலோடு, ஓசையும், அதிர்வின் துரித நடையும் கணந்தோறும் மிகுந்துவருகிற முரசொலியும் சேர்ந்து, அந்த அமைதியைக் கலைக்கின்றன.)

-: திரை விழுகிறது :-

## காட்சி 6

**காட்சியமைப்பு**

[மணி மூன்று. காட்டில் வெற்றிடமாக்கப்பட்ட ஓர் இடம். மரங்களின் பெருங்கிளைகள் தரையிலிருந்து 5 அடி உயரத்தில் இணைந்து தாழ்ந்த மேற்கூரை போன்ற அமைப்பை ஏற்படுத்துகின்றன. கொடிகள் கயிறு போன்று ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, பின் அடிமரத்தில் கொடிகள் படர மேலே எழும்பி, பக்கவாட்டில் வளைவு போன்ற தோற்றத்தைக் கொடுக்கின்றன. இவ்வாறு சூழப்பட்ட அவ்விடம் இருண்ட, கெட்ட வாடை வீசுகிற பழைய கப்பல் ஒன்றின் சரக்குகள் சேமித்து வைக்கும் அடித் தளத்தைப் போன்றுள்ளது. சந்திரன் ஒளி முற்றிலும் மறைக்கப்பட்டுள்ள நிலையில் ஊடுருவி வரும் தெளிவற்ற வெளிறிய ஒளிமட்டுமே உள்ளது. குச்சுச் செடிப் புதர்களினூடே தள்ளாடியும் ஊர்ந்தும் இடப் புறமிருந்து யாரோ அவ்விடத்தை அடையும் ஒலி கேட்கிறது. ஜோன்ஸின் குரல், வாய் குழறிய முன கலுக்கிடையே கேட்கிறது.]

ஓ, கடவுளே! நான் இப்பொழுது என்ன செய்யப் போகிறேன்? வெள்ளிக் குண்டைத் தவிர வேறு எந்தக் குண்டும் என்னிடம் இல்லையே! அந்தப் பிசாசுகள் வேகமாக என்னைத் தொடர்ந்து வந்தால்,

எப்படி நான் அவர்களை விரட்டியடிக்கப் போகி றேன்? ஓ, கடவுளே, வெள்ளிக்குண்டு மட்டுமே மீதமிருக்கிறது! — என்னுடைய நல்ல காலத்திற்காக நான் அதையேனும் காப்பாற்றியாக வேண்டுமே. நான் அதையும் வெடித்துவிட்டால், நிச்சயமாக நான் தொலைந்தேன்! ஆண்டவனே, இங்கு இருட்டாக வன்றோ உள்ளது! சந்திரன் எங்கே? ஓ, கடவுளே! இந்த இரவு ஒரு முடிவுக்கு வரவே வராதா? (ஒலியை வைத்துத் தனது வழியை உணர்ந்து எச்சரிக்கை யோடு முன்னேறுகிறான்.) அதோ! அஃது ஒரு வெற்றிடம்போலத் தோன்றுகிறது. நான் கீழே படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும். அந்த நீக்ரோக்கள் என்னைப் பிடித்துக் கொள்வதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நான் சற்று இளைப்பாற வேண்டும்.

(அவன் இப்போதைக்குத் தனது உருவம் பார்ப் பதற்கு மங்கலாகத் தெரியும் இடம்வரை வந்து விட்டான். அவனது கால்சட்டைகள் கிழிந்து மீதமுள்ளவை அரையில் கட்டிய துண்டு என்று சொல்லுமளவுக்குத்தான் உள்ளது. களைப்பால் மூச்சிரைக்க உடலைக் குப்புறத் தரைமீது வீழ்த்து கிறான். சுற்றிலும் அடைப்புள்ள அவ்விடத்தில் மெது வாக ஒளி பரவுகிறது. ஜோன்ஸுக்குப் பின்னால் இரு வரிசைகளாக உருவங்கள் அமர்ந்திருப்பது தெரி கிறது. அவர்கள் தொய்ந்துபோய், மனம் சோர்ந்து, கூனிக்குறுகி ஒருவரையொருவர் பார்த்தவண்ணம், அவர்களின் முதுகுகள் காட்டுடன் தளையிட்டுப் பிணைக்கப்பட்டிருப்பதைப் போன்ற நிலையில் அமர்ந்

துள்ளனர். இடையில் கட்டிய துண்டைத் தவிர உடலில் வேறு எந்தத் துணியும் இல்லாத அவர்கள் எல்லோரும் நீக்ரோக்களே. தொடக்கத்தில் அமைதியாகவும் அசைவின்றியும் உள்ளனர். பின் அவர்கள் மெதுவாக, ஒருவர் முன்னோக்கியும் ஒருவர் பின்னோக்கியும் ஒரே மாதிரியாக, கடலில் கப்பல் பக்கவாட்டில் பெரிதாக அசைவதோடு சேர்ந்து அசைவதைப்போன்று இவர்களும் உடலைத் தளர்த்தி அசைகின்றனர். அதே நேரத்தில் தாழ்ந்த குரலில் உள்ள துயரார்ந்த முணுமுணுப்பொலி அவர்களிடையே எழுகிறது. அது மெதுவாக, சீரான லயத்தில் படிப்படியாகத் தூரத்தேமுழங்கும்முரசொலியின் துடிப்பினால் இயக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டதுபோல உயர்ந்து, ஒரு நீண்ட நம்பிக்கையற்ற குரல் நடுங்குகிற புலம்பலைப் போன்று ஒலித்துத் தாங்கொண்ணா உயர் ஸ்தாயியை எட்டி, பின் மெதுவாகப் படிப்படியாக இறங்கி, ஓசையற்று அமைதியாகி மீண்டும் மேலே எழுகிறது. ஜோன்ஸ் அதிர்ச்சியடைகிறான். தலையை உயர்த்தி அந்த உருவங்களைப் பார்க்கிறான். அக்காட்சியை மனத்தினின்றும் அகற்ற மீண்டும் தரையில் குப்புற விழுகிறான். அப்புலம்பல் ஒலி அவனைச் சுற்றி மீண்டும் எழும்பொழுது, பயத்தினால் ஏற்பட்ட உதறல் அவன் உடல் முழுவதையும் நடுக்குகிறது. அடுத்த தடவை அவனது குரல் ஏதோ இயற்கையை மீறிய கட்டாயத்தினால் கட்டுப்பட்டதைப் போன்று மற்றவர்களுடன் சேர்ந்து தொடங்குகிறது. அவர்களது கூட்டுக் குரலொலிகள் உயரும்பொழுது, மற்றவர்கள் இருப்பதைப் போன்று அவனும் விழுந்து அமர்ந்து முன்னும் பின்னும்

அசைகிறான். அவனது குரலில் துன்பமும், பாழ்பட்ட மனநிலையும் உயரெல்லையை எட்டுகின்றன. ஒளி மங்குகிறது. மற்றக் குரல்கள் நின்றுவிடுகின்றன; இருள் மட்டும் மீதமாயுள்ளது. ஜோன்ஸ் தத்தி முத்தி எழுந்து ஓடுவதைக் கேட்க முடிகிறது. அவன் காட்டினுள் தூரத்தே நகர்ந்து செல்லச் செல்ல அவனது குரல் மெல்லமெல்லத் தொனியில் குறைந்து தணிவுறத் தொடங்குகிறது. அந்த முரசு உரக்க, வேகமாக, ஒருவகை அழுத்தத்துடன் வெற்றித் துடிப்போடு ஒலிப்பது கேட்கிறது.)

-: திரை விழுகிறது :-

## காட்சி 7

காட்சியமைப்பு

[ஐந்து மணி. ஒரு பெரிய ஆற்றின் கரையில் பிரம்மாண்டமான ஒரு மரத்தின் அடிப்பாகம். கரடு முரடான அமைப்புடைய கற்பாறைகள் பலிபீடத்தைப் போன்று மரத்தருகே உள்ளன. உயர்ந்த அந்த ஆற்றங்கரை மிக நெருக்கமான பின்னணியாக இருக்கிறது. இதற்கப்பால் நிலவு ஒளியில் ஆற்றின் மேற்பரப்பு சலனமின்றியும் பிரகாசமாகவும் வியாபித்துள்ளது. பின், அது தூரத்தே நீலநிறப் பனிமூட்டம் என்னும் மௌனத் திரையினுள் சென்று மறைந்து விடுகிறது. சங்கிலியால் பிணைக்கப்பட்ட அடிமைகளின் தூரத்தே இருந்து எழும்பும் நீண்ட நம்பிக்கை வறண்ட புலம்பல் உயர்ந்தும் தாழ்ந்தும் கேட்கிறது. இதோடிணைந்து ஜோன்ஸின் குரல் இடப்புறமிருந்து கேட்கிறது. முரசொலி இதற்குத் தாளமாக அமைகிறது. அவன்து குரல் ஒலித்தல் நிற்கும் தறுவாயில் அவன் அந்தத் திடல் வெளியினுள் நுழைகிறான். அவனது முகபாவம் நிலையானதாகவும் கல்போன்றும் உள்ளது. அவனது முகத்தோற்றத்தில் அசைவில்லை; நெகிழ்ச்சியில்லை கண்களில் நோகாத கவலையின் சாயல் தெரிகிறது. ஒரு பளபளப்போடு அல்லது தன்வயமிழந்த சந்நத நிலையில் நடக்கும் ஒருவனைப்போன்று புதிரான அமைதியோடு நகர்

கிறான். மரத்தைச் சூழ உள்ள இடத்தையும், கரடு முரடான அக் கற் பலிபீடத்தையும், நிலவொளியில் தூரத்தே பளிச்சிடும் ஆற்றின் மேற்பரப்பு ஆகிய வற்றையும் பார்க்கிறான். பின், மனம் குழம்பிய கையறுநிலையில் தனது கையால் தலையைத் தடவு கிறான். பின் இன்னதென்றறியாத உணர்ச்சி ஒன்றுக்குக் கீழ்ப்படிந்தவனாகப் பலிபீடத்திற்கு முன்பு பக்தியோடு முழங்காலிடுகிறான். பின் கொஞ்சம் தன் நிலைக்கு வந்ததைப்போன்று, அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதை ஓரளவாவது அறியக் கருதி எழுந்து நிற்கிறான். அச்சமிகுதியோடு சுற்று முற்றும் பார்க்கிறான்—முன்பின் தொடர்பற்று முணு முணுக்கிறான்.]

என்ன .........நான் என்ன செய்து கொண்டிருக் கிறேன்? இது எந்த இடம்? இந்த இடம் ......வந்து ......இந்த இடம்......வந்து.........அந்த மரம்......... அந்தக் கற்கள்.........அந்த ஆறு எல்லாம் எனக்குத் தெரியும்போல் தெரிகிறதே! எனக்கு நினைவிருக் கிறது........ வந்து இதற்குமுன் நான் இங்கு வந்திருப் பதைப் போன்று தோன்றுகிறதே. (நடுங்கியவாறு) ஓ ! கஷ்டகாலமே. இந்த இடத்தைப் பார்த்தால் எனக்கு ரொம்பப் பயமாயிருக்கிறதே ! பயமாயிருக் கிறதே! ஓ, கடவுளே ! இந்தப் பாவியைக் காப்பாற்றும்.

(பலிபீடத்தை விட்டகன்று ஊர்ந்து சென்றவாறே, அவன் தரையில் உடலைக் கூனிக்குறுக்கிப் பதுங்கு கிறான். அவன் முகம் தெரியவில்லை. உணர்ச்சி மிகுதியால் ஏற்பட்ட பயத்தினால் விம்மியழுவதால்

புயங்கள் புடைத்துத் தாழ்கின்றன. அடிமரத்தின் பின்புறமிருந்து, அதனுள்ளே இருந்து வெளியே குதித்ததைப்போன்று, காங்கோ நாட்டுப் பேயோட்டும் மந்திரவாதியின் உருவம் வெளித்தோன்றுகிறது. அவன் வற்றி வதங்கிய கிழத்தோற்றமுடையவன். அவனது இடையில் ஏதோ ஒரு சிறிய விலங்கின் குறுமென் மயிர்த்தோலுடையும், முன்பக்கமாக அதன் நீண்ட வால் குஞ்சம்போல் தொங்குவதும் தவிர வேறெதுவும் கிடையாது. பளிச்சென்ற சிவப்புக் கசாயத்தால் அவன் உடல் முழுவதும் கறையேற்றப்பட்டுள்ளது. அவனது தலையில் இருபுறமும் கவடுகள் மேல்நோக்கியவாறு கலைமான் கொம்புகள் உள்ளன. ஒரு கையில் எலும்புக் கிலுகிலுப்பை ஒன்றை வைத்திருக்கிறான். ஆஸ்திரேலியக் கொண்டைக்கிளியின் இறகுகளால் ஆன குஞ்சம் ஒரு நுனியில் இணைக்கப்பட்ட மந்திரக்கோலை, மறு கையில் வைத்திருக்கிறான். அவன் கழுத்தைச் சுற்றிலும், காதுகளிலும், மணிக்கட்டுகளிலும், கணுக்கால்களிலும் ஏராளமான கண்ணாடி மணிகளாலும் எலும்பினாலும் ஆன ஆபரணங்கள் உள்ளன. ஒலியெழாமல் ஒரு விந்தையான தாவு நடையில் அடிபோட்டு அந்த வெட்ட வெளியில் ஜோன்ஸுக்கும் பலிபீடத்திற்கும் இடையில் வருகிறான். பின், ஒரு பூர்வாங்கமான அழைப்பாணையாகத் தனது காலைத் தரையில் உதைத்தவாறு மந்திர உச்சாடனத்துடன் ஆடத் தொடங்குகிறான். அவனது அழைப்பாணைக்குப் பதில் சொல்வதைப் போன்று முரசறையும் ஒலி கடுஞ்சீற்றமும், வெற்றிப் பெருமிதமும், மகிழ்வும் காட்டும் அதிரொலியுடன் முழங்குகிறது. அதன் துடிப்புகள், தாள லயம் ஒத்த

அதிர்வுடன் காற்றில் நிரம்புவது தெரிகிறது. ஜோன்ஸ் நிமிர்ந்து பார்க்கிறான். திடுக்குற்றுத் துள்ளி எழு கிறான். திகிலூட்டும் விநோதமான இப் புதுத் தோற்றத்தினால் உண்டான அகத்தோடு, அதனால் கவரப்பட்டவனாய் அசைவற்று, செயல் சுவாதீன மற்று, பாதி மண்டியிட்டுப் பாதி அமர்ந்த நிலையில் விறைத்து நின்றுவிடுகிறான். தன் எலும்புக் கிலு கிலுப்பை தாளம் போட மந்திரவாதி 'தக் தக்' எனத் தரையை மிதித்தவாறு அசைந்து அசைந்து ஆடத் தொடங்குகிறான். கிலுகிலுப்பை ஒலியை எழுப்பு கின்றது. வார்த்தைப் பிரிவுகள் தெளிவில்லாமல் அவன் குரல் ஒரே வகையான சலிப்பூட்டும் ஒரு பேய் மந்திர முனகலுடன் ஏறி இறங்கி, தாழ்குரல் பாட்டுப்போல ஒலிக்கிறது. படிப்படியாக அவனது நடனம் தெளிவான ஓர் ஊமைக் கூத்தின் விளக்க உரையாக மாறுகிறது. அவனது தாழ்குரல் பாடல், மந்திர உச்சரிப்பு ஒன்றுக்கும் வசப்படாத தேவதை ஒன்று, பலி கேட்டுத் துடிக்கும் கடுமையைக் கட்டுப் படுத்தும் மந்திர உச்சாடனமாகிறது. அவன் ஓடு கிறான்; பேய்களால் விரட்டப்படுகிறான்; அவன் ஒளிகிறான்; மீண்டும் ஓடுகிறான். அவனுடைய ஓட்டம் கட்டுக்கு மீறியதாகிப் பின் மேலும் மேலும் அவனை ஓடஓடத் துரத்தும் பேய் கொஞ்சம்கொஞ்ச மாக அவனை நெருங்கிவிடுகிறது. மெள்ள மெள்ளப் பயமென்னும் சக்தி அவனை மேலும் மேலும் தீவிர மாகப் பற்றிக்கொள்கிறது. அவனுடைய தாழ்குரல் பாடல் எடுப்பான ஓசையை அடையும் நிலையில் வீறிட்டு எழும் அலறல் குரல் இடையிடையே குறுக் கிடுகிறது. ஜோன்ஸ் முற்றிலும் மனோவசிய

சக்திக்குக் கட்டுப்பட்ட நிலைக்கு வந்துவிட்டான். அவனது குரல் மந்திர உச்சாடனத்துக் கூக்குரல் களுடன் சேர்ந்துவிடுகிறது. அவன் கைத்தாளம் போடுகிறான். இடுப்புக்குமேல் உடம்பு முழுவதையும் இங்குமங்குமாக அசைத்து ஆடுகிறான். அந்த முழுப் பேய்ச்சக்தி முற்றுமாக அவனுள் புகுந்து கொள்கிறது. நாட்டியத்தின் பொருளோடு அவன் ஐக்கியமாகிவிடுகிறான். அந்தச் சக்தியாகவே அவன் மாறிவிடுகிறான். இறுதியாக ஊமைக் கூத்தின் உட் கிடைப்பொருள், நம்பிக்கை இழந்த ஓர் ஊளையொலி யுடன் நின்றுவிட்டாலும், மீண்டும் காட்டுமிராண்டிக் குரூர நம்பிக்கையுடன் தொடங்குகிறது. அங்கும் ஒரு மீட்புக்கு வழியுண்டு — வீடுபேறுண்டு. தீய சக்திகள் பலிகேட்டுத் துடிக்கின்றன. அவை திருப்திப்படுத்தப் படவேண்டும். பேயோட்டும் மந்திரவாதி புனித மரத்தை நோக்கி, அப்பாலுள்ள ஆற்றை நோக்கி, பலி பீடத்தை நோக்கி, இறுதியாக ஜோன்ஸை நோக்கி அச்சம் தருகிற கட்டளையுடன் தனது மந்திரக் கோலை நீட்டுகிறான். ஜோன்ஸ் அதன் பொருளை உணர்ந்துகொண்டவன்போல் காணப்படுகிறான். அவன், தானேதான், தன்னைப் பலிக்குத் தயாராக்கிக் கொள்ளவேண்டும். வலிப்பு வந்தவன்போல் தனது நெற்றியைத் தரையில் மோதி ஈனத்தனமாக அரற்று கிறான்.)

கருணை காட்டும், ஏ இறைவனே! கருணை காட்டும்! இந்த ஏழைப் பாவியின்மேல் கருணை காட்டும்.

(அந்தப் பேயோட்டும் மந்திரவாதி ஆற்றங் கரைக்குத் தாவி, தனது கரங்களை நீட்டியவாறு

நீரின் ஆழத்தருகிலிருந்து ஒரு தேவதையை அழைக்கிறான். பின் தன் கரங்களை உயர்த்தி நீட்டிய நிலையிலேயே பின்னோக்கி வருகிறான். கரைக்கு மேல் ஒரு முதலையின் பெரிய தலை தெரிகிறது. அதன் கண்கள் பசுமை நிறச் சுடரொளி வீசிச் ஜொலித்தவாறு ஜோன்ஸையே கூர்ந்து நோக்குகின்றன. தப்ப முடியாமல் பார்வையாலேயே ஈர்த்துப் பிடிக்கப் பட்டவனாய் ஜோன்ஸ் அவற்றையே உற்றுப் பார்க்கிறான். மந்திரவாதி துள்ளிக் குதித்தவாறு அவனை நெருங்கித் தனது மந்திரக்கோலால் தொடுகிறான். காத்துக்கொண்டிருக்கும் அந்த ராட்சத விலங்கிடம் செல்ல ஆணையிடுவதுபோலச் சாடை மூலம் ஜோன்ஸை ஏவுகிறான். ஜோன்ஸ் தனது அடிவயிற்றால் ஊர்ந்தவாறே தொடர்ந்து புலம்பிக் கொண்டே முதலையை நெருங்கி நெருங்கிச் செல்கிறான்.)

கருணை காட்டும், ஆண்டவனே! கருணை காட்டும்!

(முதலையும் தனது மிகப் பெரிய உடலை வலித்திழுத்து நிலத்திற்குக் கொண்டுவருகிறது. ஜோன்ஸ் நெளிந்து புரண்டு அதனை நோக்கிச் செல்கிறான். வெறிகொண்ட எக்களிப்பினால் மந்திரவாதியின் குரல் கீச்சிடுகிறது. முரசு வெறிகொண்டு ஒலிக்கிறது. ஜோன்ஸ் கடுந்துயருடன் கருணைக்கு மன்றாடி முற்றும் களைத்த நிலையில் வலிப்பு வந்தாற்போல் கோரமாக உரக்கக் கத்துகிறான்.)

ஆண்டவனே, என்னைக் காப்பாற்றும்! ஏசு பெருமானே, என்னுடைய பிரார்த்தனையைக் கேளும்!

(உடனடியாக, அவனது பிரார்த்தனைக்குப் பதில் சொல்வதைப்போன்று அவனிடம் மீதமிருக்கும் ஒரு துப்பாக்கிக் குண்டைப்பற்றிய எண்ணம் மனத்தில் வருகிறது. எதிர்ப்புக் குரலில் உரக்கக் கத்தியவாறு அவன் தன் இடையிலுள்ள கைத் துப்பாக்கியைச் சுண்டி எடுக்கிறான்.)

அந்த வெள்ளிக்குண்டு இருக்கிறது! நீ என்னைக் கொண்டுபோக முடியாது.

(சட்டெனத் தனக்கு முன்பாக உள்ள பச்சை நிறக் கண்களை நோக்கிச் சுடுகிறான். ஆற்றங் கரைக்குப் பின்னால் முதலையின் தலை புதையுண்டு மறைந்துவிடுகிறது. மந்திரவாதி புனிதமான அந்த மரத்திற்குப் பின்னால் தாவிச்சென்று மறைந்து விடுகிறான். ஜோன்ஸ் தன் கரங்களை விரித்துப் போட்டவாறு தரையில் வீழ்ந்துகிடக்கிறான். பயத் தால் தேம்பித் தேம்பி அழுகிறான். முரசின் துடிப்பு அவனைச் சுற்றியுள்ள அமைதியைக் குழப்பம் நிரம்பிய, ஆனால் பழிவாங்கும் சக்தியுடன், துயரச் சாயல் நிரம்பிய துடிப்பால் நிரப்புகிறது.)

-: திரை விழுகிறது :-

# காட்சி 8

## காட்சியமைப்பு

[பொழுது புலரும் நேரம். காட்சி இரண்டில் இருந்ததைப்போன்றே பரந்த வெளியையும் காட்டையும் பிரிக்கும் எல்லைக் கோடு. அருகிலுள்ள மரத்தின் அடிப்பாகங்கள் மங்கலாகத் தெரிகின்றன. ஆனால், அவற்றின் பின்னுள்ள காடு இன்னும் ஓர் இருண்ட மொத்தையாகக் காணப்படுகிறது. அந்த இடத்திலேயே முரசு ஒலிப்பதுபோலத் தோன்றுகிறது. முரசொலி அந்த அளவு இடைவிடாதும் பலமாகவும் முழங்கி அதிர்கிறது. லெம் இடப்புறமிருந்து ஒரு சிறிய படைவீரர் கூட்டம் பின்தொடர உள்ளே வருகிறான். இலண்டன் மாநகரத்து வர்த்தகன் ஸ்மிதர்ஸூம் அவனுடன் வருகிறான். லெம் உடல் திண்மை உடையவன்; மனிதக் குரங்கின் முகத்தையொத்த முகமுள்ளவன்; பழைய ஆப்பிரிக்கக் காட்டுமிராண்டி; சுத்த ரத்த நீக்ரோக்களின் வமிசத்தில் வந்தாற் போன்றவன். இடையில் ஒரு துண்டு மட்டும் அணிந்துள்ளான். அவனது இடுப்பைச் சுற்றித் தோட்டாக்கள் நிறைந்த இடைவாரும் அதில் ஒரு கைத் துப்பாக்கியும் உள்ளன. அவனது வீரர்கள் கந்தலுடைகளால் வெவ்வேறு அளவில் தங்கள் நிர்வாணத்தை மறைத்துள்ளார்கள். எல்லோரும்

அகன்ற ஓலைத் தொப்பிகளை அணிந்துள்ளனர். அவர்களில் ஒவ்வொருவனும் ஒரு சுழல் குழல் துப்பாக்கி வைத்துள்ளான். ஸ்மிதர்ஸ் முதல் காட்சியில் இருந்ததைப்போன்றே இருக்கிறான். அவர்களுள் ஒருவன் குறிப்பாகத் தடம் கண்டு பிடிப்பவன், நிலத்தில் எதையோ உன்னிப்பாக இங்கு மங்கும் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஜோன்ஸ் காட்டினுள் நுழைந்த இடத்தைச் சுட்டிக் காட்டியவாறு அவன் உறுமுகிறான். லெம்மும் ஸ்மிதர்ஸும் அதைப் பார்க்க வருகிறார்கள்.]

**ஸ்மிதர்ஸ் :** (ஒரு கணம் பார்த்த பிறகு வெறுப்போடு திரும்பி) அவன் இங்கிருந்துதான் போயிருக்கிறான், நன்றாகத் தெரிகிறதே! உங்கள் காரியம் உருப்பட்டால் போலத் தான். இதற்குள் அவன் பல மைல்களைத் தாண்டிக் கடற்கரையைச் சேர்ந்து அங்கே பத்திரமாக இருப்பான். நாசமாய்ப் போக அவன் போக்கு! நீங்கள் அவனைக் கோட்டைவிட்டுவிடுவீர்கள் என்று சொன்னேனா இல்லையா? ஒரு முழு இரவையும் நாசமாய்ப் போகிற உங்கள் முரசைக் கொட்டியும் மடத்தனமான மந்திர உச்சாடனங்கள் செய்தும் வீணடித்து விட்டீர்களே! அடா! ஆண்டவன்தான் உங்களைக் காப்பாத் தணும். என்ன ஒரு கூட்டமப்பா!

**லெம் :** (அடித்தொண்டையில்) நாங்கள் அவனைப் பிடிக்கிறோம். நீ வேண்டு

மானால் பார். (அவனது வீரர்களைச் சைகைசெய்து அழைக்கிறான். அவர்கள் ஓர் அ ரை வ ட் ட வடிவில் பிட்டம் தரையில்படக் குந்துகிறார்கள்.)

ஸ்மிதர்ஸ் : (சினத்தால் கிளறிவிடப்பட்டவனாய்) நல்லது, நீங்கள் உள்ளே போய்க் காட்டினுள் அவனை வேட்டையாடத் தானே போகிறீர்கள்! இங்கே காத்துக் கொண்டிருப்பதில் என்ன பலனாம்?

லெம் : (அ சை ய ா உறுதிவாய்ந்தவனாய்— தானும் கீழே குந்தியவாறு) நாங்கள் அவனைப் பிடிக்கிறோம் பாரேன்.

ஸ்மிதர்ஸ் : (ஏளனமாக, அவனைவிட்டு அப்பால் திரும்பியவாறு) ஆகா! கிழிச்சீங்க! உங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பிசைந்து வைத்துப் பார்த்தால்கூட அவன் கெட்டிக்காரன்தான். அவனைக் க ண் ட ா லே எனக்கு ஆகாதுதான். ஆனாலும் அவனை மெச்சி இதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். காட்டி னுள்ளிருந்து விறகு சுள்ளிகள் ஒடிந்து விழும் ஓர் ஒலி கேட்கிறது. சுடுவதற்காக எச்சரிக்கையுடன் துப்பாக்கிக் குதிரையை இழுத்து ஏற்றியவாறு வீரர்கள் துள்ளி எழுகிறார்கள். லெம் அசையா உறுதி வாய்ந்த தோற்றத்துடன் அமர்ந்து, கூர்ந்து கவனிக்கிறான். காட்டினுள் அதே ஒலி

மீண்டும் கேட்கிறது. லெம் வேகமாகத் தன் கையால் ஒரு சைகை செய்கிறான். சட்டென அவனது ஆள்கள் வெவ்வேறாக, ஆனால் அமைதியாகக் காட்டினுள் பிரிந்து, வேறுவேறான இடங்களுக்கு ஊர்ந்து சிதறிச் சென்று நுழைகிறார்கள்.)

**ஸ்மிதர்ஸ் :** (அதன் பிறகு அமைதி நிலவுகிறது—அந்த அமைதிக்கிடையே இறுமாப்பான குசுகுசுப்புக் குரலில்) அது அவனாகத் தான் இருக்கும் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களாக்கும்? அப்படித் தான் நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

**லெம் :** (அமைதியாக) நாங்கள் அவனைப் பிடிக்கிறோம் பார்.

**ஸ்மிதர்ஸ் :** பாழாய்ப்போன மரமண்டைகளே! (ஒரு நொடிநேரச் சிந்தனைக்குப்பின்—வியப்புடன்) இன்னும் அப்படியெல்லாம் நடக்கலாம்தான். இந்த நாற்றக் காட்டில் நாசமாய்ப்போகிற வழியை அவன் தவற விட்டுவிட்டிருந்து, தனக்குத் தெரியாமலேயே காட்டை ஒரு சுற்றுச்சுற்றி வந்தாலும் வருவான். எல்லோரும் இப்படித்தான் செய்கிறார்கள்.

**லெம் :** (கண்டிப்புக் குரலில்) உஷ்! (காட்டிலிருந்து அநேகச் சுழல் துப்பாக்கி

வேட்டொலிகள் கேட்கின்றன. அதைப் பின்பற்றி ஒரு நொடி நேரத்திற்குப்பின் காட்டுமிராண்டிகளின் வெற்றி ஆரவாரங் களும் ஊளையொலிகளும் கேட்கின்றன முரசறையும் ஒலி சட்டென நின்றுவிடு கிறது. அசட்டுத் திருப்தியுடன் லெம் வெள்ளைக்காரனைப் பார்க்கிறான்.) நாங்கள் அவனைப் பிடிச்சாச்சு. அவன் செத்துப்போனான்.

ஸ்மிதர்ஸ் : (ஒரு சிடுசிடுப்புடன்) அது அவன்தான் என்று உனக்கு எப்படித் தெரியும்? அவன் செத்துவிட்டான் என்று உனக்கு எப்படித் தெரியும்?

லெம் : என்னுடைய ஆள்கள் கொஞ்சம் வெள்ளிக்குண்டு வைத்திருந்தார்கள். நிச்சயமாக அவனைக் கொல்வார்கள்.

ஸ்மிதர்ஸ் : (திகைத்துப்போய்) அவர்கள் வெள்ளிக் குண்டா வைத்திருந்தார்கள்?

லெம் : ஈயக்குண்டு அவனைக் கொல்லாது. அவன் பலம்வாய்ந்த மந்திர வலிமை பெற்றவன். நான் சில நாணயங்களை உருக்கிச் சில வெள்ளிக்குண்டுகள் செய்தேன். அவற்றிற்குப் பலம்வாய்ந்த மந்திர சக்தியைக்கூட ஏற்றினேன்.

ஸ்மிதர்ஸ் : (உண்மையை இப்போதுதான் உணர்ந்த வனாக) இரவு முழுவதும் இதைத்தான்

செய்துகொண்டிருந்தீர்களா, என்ன? அந்த வெள்ளிக்குண்டை வார்த்தெடுக்கும்வரை அவனைத் துரத்திச்செல்ல உங்களுக்குப் பயம், அப்படித்தானே!

லெம் : (ஓர் உண்மையை மட்டும் சொல்லியவாறு) ஆம், அவனிடம் பலமான மந்திரசக்தி இருந்தது. ஈயக்குண்டெல்லாம் உதவா.

ஸ்மிதர்ஸ்: (அவனுடைய தொடையைத் தட்டி வெடிச்சிரிப்புச் சிரித்தவாறு) ஹா—ஹா! நீங்கள் நரகத்தையும் வெற்றிகொண்டு விடுவீர்களப்பா! (பின் சுயநினைவுக்கு வந்தவனாய்—இகழ்ச்சியாக) பாழாய்ப் போன பைத்தியக்காரர்களே, நீங்கள் சுட்டுக்கொன்றது அவனையன்று—இல்லவேயில்லை என்று நான் பந்தயம் கட்டுகிறேன்!

லெம் : (அமைதியாக) அவர்கள் அவனை இப்பொழுது தூக்கி வருகிறார்கள். (ஜோன்ஸின் தொய்ந்தாற்போலுள்ள சடலத்தை வீரர்கள் காட்டிற்கு வெளியே எடுத்து வருகிறார்கள். அவனது இட மார்பின் புறத்தில் சிவப்பு ஊதா நிறத்தில் ஒரு துளை உள்ளது. அவன் இறந்து விட்டான். அவனை லெம்மிடம் கொண்டு செல்கிறார்கள். அவனும் மிகுந்த திருப்தியோடு அவன் உடலைப் பரிசோதித்துப் பார்க்கிறான். ஸ்மிதர்ஸ் அவனுடைய புஜத்திற்குமேல் குனிகிறான் — பயத்தால் அதிர்ச்சியடைந்த குரலில்) நல்லது, இவர்கள் உனக்குச்

சரியானதைத்தான் செய்திருக்கிறார்கள். ஜோன்ஸ் பையா, ஏ பயலே! ஹெர்ரிங் மீனைப் போலன்றோ செத்துவிட்டாய்! (கேலியாக) இப்போது உன் உயர்ந்த பெரிய ஆடம்பரத் தோரணைகளெல்லாம் எங்கே, அழகுமிகு மாமன்னன் அவர்களே! (பின் பல்லிளித்தவாறு) வெள்ளிக் குண்டாமே! கடவுள் காப்பாற்றட்டும். எப்படியும் ஆடம்பரத் தோரணையின் உச்சக் கட்டத்தில்தான் செத்திருக்கிறாய், பரவாயில்லை! (லெம் தன் வீரர்களுக்குச் சைகைசெய்து உடலை இடப்புறமாக வெளியே எடுத்துச்செல்லச் செய்கிறான். ஸ்மிதர்ஸ் ஏளனமாகச் சிரித்தவாறே அவனுடன் பேசுகிறான்.)

ஸ்மிதர்ஸ் : பாழாய்ப்போன உங்கள் மந்திர சூனியமும் மடத்தனமான முரசின் ஒலியுமே அவனைப் பாதை தவறிச் சுற்றிச்சுற்றி ஓடச் செய்திருக்கின்றன என்று நீங்கள் நினைக்கிறீர்களாக்கும்! (ஆனால் லெம் பதில் பேசவில்லை. அந்தக் கேள்வியைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே இல்லை. தனது ஆள்களைத் தொடர்ந்து அவன் இடப்புறமாகச் செல்கிறான். ஸ்மிதர்ஸ் வெறுப்புடனும் ஏளனத்துடனும் அவன் போவதைப் பார்க்கிறான்.) மடப்பன்றிகள், எல்லோருமே தாம்! பாழாய்ப்போன கறுப்பர்கள்!

-: திரை விழுகிறது :-

முற்றிற்று

தமிழ்நாட்டு அரசின் சிறப்பிலக்கிய
மொழிபெயர்ப்பு வெளியீடு : 7

1. சோவியத்துக் கவிஞர் நூற்றுவர்
2. சிவானந்த நடனம்
3. தீர்க்கதரிசி
4. The Squirrel in the Court-Yard
5. The Ten Decads (Patirrup pattu)
6. Jnanaratham
7. பேரரசன் ஜோன்ஸ்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
கல்லூரிச் சாலை
சென்னை - 600 006